# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 7415 / 2011 / எம்சி. 8 நாள் : 05 .09. 2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 12.09.2011 திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - செப்டம்பர் 2011

## (நிகழ்ச்சி நிரல்)

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | வருவாய் பிரிவு - தொலைதொடர்பு கோபுரங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் காலியிடங்கள் - சொத்து வரி விதித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - உக்கடம் மீன் சந்தை – சுகாதாரமுறையில் கட்டுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - வார்டு 43 – ஒக்கிலியர் காலனி – மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் உள்கட்டமைப்பு பணி செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - பயனீர் மில் சாலை – சுகாதார குடியிருப்பு புதியதாக கட்டுதல் - - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வார்டு 55,56,57,58 – குடிநீர் குழாய் மாற்றியமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 22 – மசால் வீதி – சமுதாயக் கூடம் கட்டப்பட்டது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் -தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு நேரம் காப்பாளர் அறை ஒதுக்கீடு செய்தல் - உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்கள் 1, 2 – ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - டேன் டீ மற்றும் ஆவின் பாலகம் அமைக்கப்பட்டது- உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | கிழக்கு மண்டலம் - வார்டு எண் 5 – ஆஞ்சநேயர் காலனி – சமுதாயக் கூடம் கட்டப்பட்டது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | கிழக்கு மண்டலம் - வார்டு எண் 15 - இந்திரா நகர் - சமுதாயக் கூடம் கட்டப்பட்டது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பணியமைப்பு - சென்னை உயர் நீதிமன்ற வழக்குகள் - வாதாடுதல் – கூடுதல் வழக்கறிஞர் நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பணியமைப்பு -உச்சநீதிமன்ற வழக்குகள் - வாதாடுதல் – முதுநிலை வழக்கறிஞர் நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | கல்விப் பிரிவு - மாநகராட்சி ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் - கேன்வாஸ் ஷு மற்றும் காலுறைகள் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - Jnnurm - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் - பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துதல் - விலக்களித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - தெரு விளக்குகள் பராமரித்தல் - தி /ள். சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட், நிறுவனம் - ஒப்பந்த நீடிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - தெரு விளக்குகள் பராமரித்தல் - தி /ள். சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட், நிறுவனம் - ஒப்பந்த நீடிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 19 | பொறியியல் பிரிவு -வடக்கு மண்டலம் - தெரு விளக்குகள் பராமரித்தல் - தி /ள். சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட், நிறுவனம் - ஒப்பந்த நீடிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 20 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - தெரு விளக்குகள் பராமரித்தல் - தி /ள். சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட், நிறுவனம் - ஒப்பந்த நீடிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 21 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலை யில் உள்ள நொய்யல் ஆற்றில் பாலம் கட்டுதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 22 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு வார்டுக்குழு பகுதிகள் - துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு வார்டுக்குழு பகுதிகள் - துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு வார்டுக்குழு பகுதிகள் - துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு வார்டுக்குழு பகுதிகள் - துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு வார்டுக்குழு பகுதிகள் - குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு வார்டுக்குழு பகுதிகள் - குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு வார்டுக்குழு பகுதிகள் - குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு வார்டுக்குழு பகுதிகள் - குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி - இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் - குடிநீர் வழங்குதல் - விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதுல் - தொடர்பாக |
| 31 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு வார்டுக்குழு பகுதிகள் - தெருவிளக்கு பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 32 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு வார்டுக்குழு பகுதிகள் - தெருவிளக்கு பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 33 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு வார்டுக்குழு பகுதிகள் - தெருவிளக்கு பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 34 | பொறியியல் பிரிவு -விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி – உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு வார்டுக்குழு பகுதிகள் - தெருவிளக்கு பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 33- சிவானந்தா காலனி பூங்கா வளாகத்தில் உள்ள யோகா மையம் - சிவானந்தா காலனி குடியிருப்போர் நல சங்கத்திற்கு ஒப்படை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 36 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 30- காந்திபுரம் 3-நெ. வீதி – புதிய சமுதாயக் கூடம் கட்டப்பட்டது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 37 | பணியமைப்பு - சொத்துவரி தீர்ப்பாய வழக்குகள் - மேல்முறையீட்டு வழக்குகள் - வழக்கு கட்டணம் செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | பணியமைப்பு - பணிமூப்பு அடிப்படையில் வரி வசூலர்களுக்கு வருவாய் சிறப்பு ஆய்வாளர் பணியிடம் வழங்குதல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 39 | Jnnurm- ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர் பகுதியில் நவீன கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைத்தல் - நிலம் வாங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 40 | பொறியியல் பிரிவு - சிறப்பு சாலைத் திட்டம் 2011-12 - சாலைகள் புதுப்பித்தல் - இரண்டாம் கட்டம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 41 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல் - 88 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்துதல் - தி/ ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை –ஒப்பந்தகாலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல் - 124 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்துதல் - தி/ ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை –ஒப்பந்தகாலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 43 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல் - 130 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்துதல் - ஒப்பந்ததாரார் திரு ஆர். மயில்வாணன் –ஒப்பந்தகாலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 44 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல் - 80 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்துதல் - தி/ ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ், கோவை –ஒப்பந்தகாலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 45 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம்- வார்டு எண் 27 – ஆடீஸ் வீதி சத்துணவு மையம் - வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 46 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம்- வ.உ.சி. பூங்கா, டாக்டர் நஞ்சப்பா ரோடு மைதானம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 47 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம்- வ.உ.சி. பூங்கா நுழைவு கட்டணம் - ஒப்பந்ததாரர் திரு எ. சிவக்குமார் - 5% ஏலத்தொகை உயர்வு செய்து உரிமம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 48 | கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண் 11 – கமலா மில் குட்டை பகுதி – சமுதாயக் கூடம் கட்டப்பட்டது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 49 | கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண் 4 – டாக்டர் ஜெகநாதன் நகர் பகுதி – சமுதாயக் கூடம் கட்டப்பட்டது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 50 | பணியமைப்பு - திரு ரொசாரியோ அமலதாஸ் - இளநிலை உதவியாளர் -ஈரோடு மாநகராட்சியில் இருந்து கோவை மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதல் கோரியது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 51 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 6 – திருக்குமரன் நகரில் உள்ள பூங்கா திடல் - உள் விளையாட்டு அரங்கம் - பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) திருக்குறள்**

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

(குறள் 97)

**விளக்கம்**

நன்மையான பயனைத் தரக்கூடிய நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும் இன்பத்தையும், நன்மையையும் உண்டாக்கக் கூடியவைகளாகும்.

திருவள்ளுவர்

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

**பொருள்** : சொத்து வரி – தொலை தொடர்பு கோபுரங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் காலியிடங்கள் – சொத்துவரி விதித்தல் – அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தல் தொடர்பாக – நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது–மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் – தொடர்பாக.

---

2010–2011ம் ஆண்டிற்கான கோவை மாநகராட்சியின் பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்டத்தின் வருவாய் மேம்பாட்டுத் திட்டங்களில் ''தொலை தொடர்பு கோபுரங்களுக்கான (Telecom Towers) சொத்துவரி மாநகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலி இடங்களில் வாடகை அடிப்படையில் தொலை தொடர்பு மற்றும் செல்போன் இணைப்புகளுக்கான கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிடங்கள் மற்றும் காலி இடத்திற்கு ஒரே மாதிரியாக அரையாண்டு ஒன்றிற்கு சொத்துவரி ரூ.15,000 நிர்ணயம் செய்திடவும், இத்தகைய சொத்துவரி விதிப்பிற்கு தனி கேட்பு உயர்த்தவும் தொலை தொடர்பு கோபுரம் அகற்றப்பட்ட விபரத்தை கட்டிட/காலியிட உரிமையாளர் மாநகராட்சிக்கு தெரிவித்தால் ஆய்விற்குப்பின் கூடுதலாக விதிக்கப்பட்ட சொத்துவரியினை ரத்து செய்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தப்படுவதுடன் தொலை தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்படுவது ஒழுங்குபடுத்தப்படும் எனவும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டப் பிரிவு 121(3)ன்படி கட்டிடம் மற்றும் காலியிடத்திற்கு சொத்துவரி விதிக்க வருடாந்திர மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு வருடாந்திர மதிப்பின் அடிப்படையில் சொத்துவரி விதிப்பு செய்தல் வேண்டும்.

மாநகரின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்து தொலை தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் காலி இடங்களுக்கும் (தொலை தொடர்பு கோபுரங்கள் அமைந்துள்ள இடத்தின் பரப்பு, ஜெனரேட்டர் பெட், ஷெல்டர் முதலிய பரப்புகளுக்கு) ஒரே மாதிரியாக அடிப்படை மதிப்பு சதுர அடிக்கு ரூ.100 என நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.26, நாள்.08.06.2010 நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொலை தொடர்பு கோபுரங்களுக்கு சொத்துவரி விதிக்கப்படாததன் காரணமாக மாநகராட்சிக்கு தொடர் நிதியிழப்பு ஏற்பட்டு வருவதைத் தடுக்கும் பொருட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்படி, சதுர அடிக்கு ரூ.100/– என்ற அடிப்படை மதிப்பிலும், அமைவிடத்திற்கு வர்த்தக அமைவிடம் 75% கூடுதல் கட்டணமாகவும், கட்டிடத்தின் தன்மை சிமெண்ட் கூரை சிமெண்ட் தளம் 75% கூடுதல் கட்டணமாகவும், கட்டிடத்தின் வயது 10 ஆண்டுகளுக்குள் 50% கூடுதல் கட்டணமாகவும் நிர்ணயம் செய்து ஆண்டு மதிப்பு கணக்கீடு செய்து தொலை தொடர்பு கோபுரங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – ஒப்புதல் அளிக்கலாம் **ந.க.எண். 5373/2010/எம்.ஏ 1**

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 68 நாள் 12.09.2011</u>

1. தொலைத் தொடர்பு கோபுரங்களை அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில் (Dangerous and offensiveTrade) இனங்கள் பட்டியலில் சேர்த்து வருடாந்திர உரிமம் கட்டணமாக ரூ. 30,000 நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. பெரும்பாலான தொலைத் தொடர்பு கோபுரங்கள் நெருக்கமாக மக்கள் வாழும் பகுதிகளில் கட்டிடங்களின் மேல் அமைக்கப்பட்டுள்ளதால் கட்டிடத்தில் ஸ்திரத்தன்மை, தொலைத்தொடர்பு கோபுரத்தின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை நன்கு ஆய்வு செய்து, பொதுமக்களுக்கு பாதிப்பில்லை என்கின்ற நேர்வில் மட்டும் உரிமம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. தொலைத் தொடர்பு கோபுரங்களை அமைக்கும் நிறுவனத்தினரால் இவ்வுரிமம் பெறப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4. தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைந்துள்ள கட்டிடங்களை வணிக முறையில் வரிவிதிப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – உக்கடம் மீன் சந்தையினை மீன் வளத்துறையின் மூலம் உலகத்தரத்திற்கு சுகாதார முறையில் கட்டுவது – சம்பந்தமாக.

பார்வை :
1. மாமன்றத்தின் தீர்மான எண் 361 / 19-02-09
2. மாமன்றத்தின் தீர்மான எண் 107/ 30-10-09
3. அரசு ஆணை (நிலை) எண்.228 நாள்.23-11-2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை.
4. இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 1132/ 2009 /அ(தெ). நாள்.21-01-2011
5. த.நா.மீ.வ.கழகத்தின் கடித எண். 1491/S3/09 நாள்.29-07-2011

பார்வை(1)–ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் கோவை மாநகராட்சி உக்கடம் மீன் விற்பனை சந்தையினை உலக தரத்திற்கு உயர்த்தி சுகாதார முறையில் மீன் விற்பனை செய்வதற்கு தேசிய மீன் வளத்துறை மூலம் மீன் விற்பனை சந்தையை கட்டி செயல்படுத்தவும், இதற்கான இடத்தை நீண்ட கால வாடகை அடிப்படையில் ஒதுக்கவும், காலக்கெடு நிர்ணயிக்கவும் பிரேரணை அனுப்பவும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பார்வை(2)–ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் கோவை மாநகராட்சிக்கு சொந்தமான போத்தனூர் ரோடு லாரிப்பேட்டையில் மொத்த வியாபார மீன் மார்கெட்டினை நீண்டகால குத்தகை அடிப்படையில் 20 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திற்கு வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் [(Design, Build, Operate and Transfer (DBOT))]அடிப்படையில் வழங்க அரசிற்கு பரிந்துறை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

பார்வை(3)–ல் கண்டுள்ள அரசாணையில் உக்கடம் மீன் விற்பனை சந்தையினை விற்பனைக்கு விடலாம் என தீர்மானித்து அரசாணையிடப்பட்டது. இந்த அரசாணையின்படி உக்கடம் மீன் விற்பனை சந்தையினை உலகத்தரத்திற்கு உயர்த்தும் வகையில் ரூ 1.96 கோடி மதிப்பீட்டில் கோவை மாநகராட்சி உக்கடம் மீன் அங்காடியை நவீனப்படுத்தி, வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (Design, Build Operate and Transfer Basis) அடிப்படையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம் பணியினை மேற்கொள்வதாலும், அது ஒரு அரசு சார்பு நிறுவனமாக இருப்பதாலும், கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களுக்கு மிக உயர்ந்த தரத்தில் மீன் உணவுகள் கிடைப்பதாலும் இதனை, சிறப்பினமாகக் கருதி ஏற்று அவ்விடத்தினை ஆண்டு ஒன்றுக்கு ரூ 3.00இலட்சம் குத்தகை வீதம் 20 ஆண்டுகளுக்கும், ஆண்டு ஒன்றுக்கு குத்தகைத் தொகை 10% உயர்த்தப்பட வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு குத்தகைக்கு விடலாம் என தீர்மானித்து அரசாணையிடப்பட்டுள்ளது.

பார்வை (4)–ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தில் த.மீன்.வ. கழகத்திற்கு S.F.FMP 64/1 & FMP 64/2 1.2168 ஏக்கர் அளவு உக்கடத்திலுள்ள இடத்தினை, நவீன மீன் விற்பனை சந்தையை கட்டுவதற்கு அனுமதித்து கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை (5)–ல் கண்டுள்ள த.மீன்.வ. கழகத்தின் கடிதத்தில் உக்கடம் பகுதியில் நவீன மீன் மொத்த விற்பனை அங்காடி மதிப்பீடு ரூ.2.45 கோடியில் கட்டுவது தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கையொப்பமிட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மதிப்பீட்டுத்தொகையில் 10% கோவை மாநகராட்சி ஏற்றுக்கொள்ளவும் பணியை நிறைவு செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுள்ளது.

எனவே தற்பொழுது கட்டுமான பொருட்களின் புதிய விலை விபர பட்டியல் (New Schedule of Rates) அரசினால் வெளியிடப்பட்டுள்ளதால் இப்பணிக்கான மதிப்பீட்டினை மறுமதிப்பீடு செய்வது அவசியமாகிறது. மேலும் மறுமதிப்பீடு இறுதி செய்த பின்னர் மேற்கண்ட பணியின் மறுமதிப்பீட்டுத் தொகையில் 10% கோவை மாநகராட்சி ஏற்றுக்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்புதலுடன் கோவை மாநகராட்சி இப்பணியினை மேற்கொள்ளவும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. இப்பணியின் மறுமதிப்பீட்டுத் தொகையில் 10% மாநகராட்சி ஏற்றுக்கொள்ள மாமன்றம் தீர்மானிக்கலாம்.

2. இப்பணிக்கு ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு மாமன்றம் பரிந்துரைக்கலாம்.

ந.க.எண்.**6346/11/MD4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 69 நாள் 12.09.2011</u>**

**அலுவலகக் குறிப்பு 1, 2 ஏற்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர அபிவிருத்தி திட்டத்தின்படி கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 05-08-2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3959/11/ எம்.டி.5 | வார்டு எண்.6 நொய்யல் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மூடுபலகையுடன் அமைத்தல் (BSUP) | 9.90 | 22-07-2011 இரண்டாம் அழைப்பு | தி/ ள் என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 5.20% அதிகம் | 4.94% அதிகம் |
| 2 | 3960/11/ எம்.டி.5 | வார்டு எண்.6 நொய்யல் நகர் பகுதியில் சிமெண்ட் கான்க்ரீட் தளம் அமைத்தல் (BSUP) | 3.50 | 22-07-2011 இரண்டாம் அழைப்பு | தி/ ள் என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 5.65% அதிகம் | 4.86% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண்.1 மற்றும் 2-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3959/2011/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 70 நாள் 12.09.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 31-07-2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலை குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7029/10/ எம்.டி.4 | வார்டு எண்.43 ஒக்கிலியர் காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு தளம் அமைத்தல் மற்றும் கணினி அறைக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 29.50 | 12-07-2011 முதல் அழைப்பு | தி/ ள் என்.பி.கே. அசோசியேட்ஸ் | 3.66 அதிகம் | 3.48 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண்.1-ல் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 7029/2010/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 71 நாள் 12.09.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 5**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 2க்குட்பட்ட பயனீர் மில் சாலையில் உள்ள பழுதடைந்த சுகாதார குடியிருப்புகளை இடித்துவிட்டு புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் 6 பிளாக்குகள் ஒரு பிளாக்கிற்கு 8 வீடுகள் வீதம் தரை மற்றும் 3 தளங்களுடன் கூடிய 48 குடியிருப்புகள் கட்ட ரூ.300 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் தமது ந.க.எண். 39618/2009/LA3 தேதி 9.11.2009-ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சி பகுதியில் சுகாதார பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்ட நிதியுதவி உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதிக்காக 2009-2010ல் செய்யப்படும் எனவும், அதற்கான முன்மொழிவுகளை குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி இவ்வலுவலக கடிதம் எண். 16056/2008/எம்.டி. 2 நாள் 12.11.2009ல் முன்மொழிவு ஆணையாளர் அவர்களால் அனுப்பப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் தமது ந.க.எண் 39618/2009/LA3 தேதி 29.1.2010ம் தேதிய கடிதத்தில் 18.1.2010ம் தேதி உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதிக்காக 2009-2010ல் குழு கூட்டத்தில் பயனீர் மில் சாலையில் சுகாதார பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட ரூ. 300 லட்சத்தில் ரூ. 150 இலட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட பயனீர் மில் சாலையில் உள்ள சுகாதார பணியாளர்களுக்கு பழுதடைந்த குடியிருப்புகளை இடித்துவிட்டு புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் 6 பிளாக்குகள் (ஒரு பிளாக்கிற்கு 8 வீடுகள் வீதம்) 48 குடியிருப்புகள் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் ரூ. 150 இலட்சமும் மாநகராட்சி பொது நிதி ரூ. 150 இலட்சமும் சேர்த்து மதிப்பீடு ரூ. 300 இலட்சத்தில் மேற்கொள்ளவும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் தமது உத்திரவு எண் 21531/2010/P3 நாள் 11.08.2010ன்படி நிர்வாக அளித்து அளித்துள்ளார். மேற்படி பணிக்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்கள் தமது கடிதம் எண் 43350/D01/2010 நாள்19.11.2010ன்படி தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளார். இந்த அனுமதி 2010-2011ம் வருட விலைவிபர பட்டியலின்படி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஐந்துமுறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. தற்போது 2011-2012 ஆண்டிற்கான விலை விகிதப்படி திருத்திய மதிப்பீடு ரூ. 310 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 310 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ளவும் அதற்காக உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் ரூ. 150 இலட்சமும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ. 160 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ. 310 இலட்சத்திற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும், தொழில்நுட்ப அனுமதி பெறவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் ரூ. 150 இலட்சமும் மாநகராட்சி பொது நிதி ரூ. 160 இலட்சமும் சேர்த்து திருத்திய மதிப்பீடு ரூ. 310 இலட்சங்களுக்கு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 16056/08/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 72 நாள் 12.09.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 31.07.2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 8077/10/ எம்.டி.2 | வார்டு எண் 55, 56, 57, 58 மற்றும் 59 பகுதிகளில் சாலைகளில் பதிக்கப்பட உள்ள சாக்கடை குழாய்கள் வரும் இடங்களில் உள்ள குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களை மாற்றி அமைத்தல். | 23.40 | 20-07-2011 ஏழாவது அழைப்பு | திரு ஆர். உமாபதி . | 4.74 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண்.1 ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 8077/2010/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 73 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு, வார்டு எண்.22ல் உள்ள மசால் வீதி பகுதியில் தேசீய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமுதாயக் கூடம் 110 ச.மீ பரப்பளவில் காங்கிரீட் கூரை கட்டிடம் நிறைவு பெற்று மின்சாதன உபகரணங்கள் பொருத்தி மின் இணைப்பு பெறப்பட்டு மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் நிலையில் உள்ளது – வாடகைக்கு விடுதல் - குறித்து.

------

கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண்.22ல் உள்ள மசால் வீதி பகுதியில் தேசீய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமுதாயக் கூடம் 110 ச.மீ பரப்பளவில் காங்கிரீட் கூரை கட்டிடம் நிறைவு பெற்று மின்சாதன உபகரணங்கள் பொருத்தி மின் இணைப்பு பெறப்பட்டு மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் நிலையில் உள்ளது.

மேற்படி கட்டிடப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விதிகளின்படி (2011-2012) தினசரி வாடகை ரூ.530/-என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி வாடகையை நிர்ணயம் செய்யவும், இப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு கட்டிடம் பயனடைய அனுமதி வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மானம் எண் 37 நாள் 11.08.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5238 / 2011 ED2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 74 நாள் 12.09.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 57 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

**பொருள் :** கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கோவை கோட்டம் - 1 நேரங்காப்பாளர் அறை குத்தகை இனத்தின் உரிமை காலம் 31.05.2011 உடன் முடிவடைந்துள்ளது – உரிமை காலம் நீட்டிப்பு செய்வது – தொடர்பாக

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண். 11-க்குட்பட்ட கீழ்க்காண் குத்தகை இனத்தின் உரிமை காலம் 31.05.2011 உடன் முடிவடைந்துள்ளது.

**குத்தகை இனம்**

1. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கோவை கோட்டம் 1 லிமிடெட் நேரங்காப்பாளர் அறை

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து அரசாணை நிலை எண். 92 நாள் 03.07.2007-ல் திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிட்டுள்ளது.

அதன்படி, உரிமை காலம் நீட்டிப்பு செய்யப்பட்டு உரிமை கட்டணம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகை இனம் அரசு சார்ந்த அலுவலமாக இருப்பதினால் அரசாணையின்படி தற்போதைய உரிமை கட்டணத் தொகையில் குறைந்த பட்சம் 15% உயர்வு செய்யப்பட்டால் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உரிமை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

| வ. எண். | குத்தகை இனம் | விவரம் | தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் | 15% உயர்வு செய்யப்பட்டால் பெறப்படும் மாதாந்திர உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கோவை கோட்டம் 1 லிமிடெட் நேரங்காப்பாளர் அறை | 16' x 10.6' அறை | 1900 | 2190 |

எனவே மேற்காண் இனத்திற்கு 15% வாடகை உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும் 01.06.2011 முதல் 31.05.2014 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிமை காலம் நீட்டிப்பு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மானம் எண் 43 நாள் 11.08.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 04675 / 2011/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 75 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 43 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள் -கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மற்றும் 2 இனங்களுக்கு 23.06.2011 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் உச்ச கேள்விதாரர்களுக்கு இனங்களை ஒப்படைத்தல் - சம்பந்தமாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மற்றும் 2 இனங்களுக்கு 23.06.2011 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் உச்ச கேள்விதாரர்களுக்கு இனங்களை ஒப்படைத்தல் கீழ்க்கண்ட விவரங்களின்படி,

இனம் எண்.1 நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1
(மாதாந்திர அடிப்படையில்)

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிமத் தொகை | மாதாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 01. | திருஜாகீர் உசேன் | 6,900 | - | 2,010 | - |
| 02. | திரு ஜி. இருதயராஜா | 6,900 | - | 4,000 | - |
| 03. | திரு ஏ.சந்திரன் | 6,900 | - | 3,331 | - |
| 04. | திரு பி.கார்த்திகேயன் | 6,900 | 8,000 | 7,400 | 8,000 |
| 05. | திரு சி.சிவக்குமார் | 6,900 | - | - | - |
| 06. | திரு எம்.ராஜ்குமார் | 6,900 | - | 3,000 | - |

வரிசை எண்.1-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர உரிமத் தொகையினை விட உயர்ந்தபட்ச கேள்விதாரர் திரு பி.கார்த்திகேயன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

இனம் எண்.2 நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 2
(மாதாந்திர அடிப்படையில்)

| வ. எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர உரிமத் தொகை | மாதாந்திர உரிமக் கட்டணம் உச்சக் கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | |
| 01. | திருஜி. இருதயராஜா | 4,950 | - | 4,200 | - |
| 02. | திரு ஏ.சந்திரன் | 4,950 | - | 3,331 | - |
| 03. | திரு பி.கார்த்திகேயன் | 4,950 | 7,600 | - | 7,600 |
| 04. | திரு சி.சிவக்குமார் | 4,950 | - | 7,000 | - |
| 05. | திரு எம்.ராஜ்குமார் | 4,950 | - | - | - |

வரிசை எண்.2-ல் கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர உரிமத் தொகையினை விட உயர்ந்தபட்ச கேள்விதாரர் திரு பி.கார்த்திகேயன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

மேலும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 21 நாள் 08.07.2011ல் இனம் எண் 1 மற்றும் 2ல் நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வாளகம் கடைகள் அமைந்துள்ள பகுதியில் திருமண மண்டபம் கட்டும் பணி மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. எனவே இக்கடைகளை ஒதுக்கீடு செய்யக்கூடாது எனவும் கோரப்பட்டது.

இதுகுறித்து பொறியியல் துறையினர் ஆய்வு செய்த விரிவான அறிக்கையுடன் மீண்டும் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டதின் பேரில் உதவி பொறியாளர் தனது 21.07.2011 தேதிய குறிப்பில் வார்டு எண். 24 க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் சாலை மற்றும் பெருமாள் கோவில் வீதி சந்திப்பில் உள்ள சத்துணவுக்கூடம் அமைந்துள்ள இடத்தில் புதிதாக சமுதாயக்கூடம் கட்டுவதற்காக ரூ.23.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரப்படும் நிலையில் உள்ளது. இந்த சமுதாயக் கூடத்திற்காக T.S.No.2665 போதுமான இடவசதி உள்ளதால் சத்துணவு மையம் அமைந்துள்ள பகுதியில் மட்டும் உபயோகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே T.S.No. 2906-ல் உள்ள நஞ்சுண்டாபுரம் சாலையில் உள்ள இரண்டு கடைகளையும் தற்போதைக்கு சமுதாய கூடத்திற்காக உபயோகிக்கும் நிலையில் இல்லை என தெரிவித்துள்ளதின் பேரில் மாநகராட்சிக்கு ஏற்படும் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட இனங்களுக்கு உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஏலத் தொகையை நிர்ணயம் செய்தும் அவர்களுக்கு நஞ்சுண்டாபுரம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மற்றும் 2 கடையை ஒதுக்கீடு செய்யவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மானம் எண் 36 நாள் 11.08.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 03886 / 2011/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 76 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 36 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

| | |
|---|---|
| பொருள் : | கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - டேன் டீ, ஆவின் பாலகம 31.05.2011 உடன் முடிவடைந்துள்ளது. மீண்டும் குத்தகைக்கு விடுவது பற்றி மாநகர மன்றம் முடிவு செய்தல், அரசு வழிகாட்டுதலின்படி புதிய வாடகை நிர்ணயம் செய்தல்-<br>------------ |

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண். 11-க்குட்பட்ட கீழ்க்காண் குத்தகை இனங்களின் உரிமை காலம் 31.05.2011 உடன் முடிவடைந்துள்ளது.

| வ. எண். | குத்தகை இனம் | விவரம் | தற்போதைய மாதாந்திர உரிமக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் ஆவின் பாலகம் | 12' x 12' காலியிடம் | 1090 |
| 02. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் டேன் டீ விற்பனை மையம். | 6' x 6' | 360 |

மேற்காண்வரிசை எண்-1 மற்றும் 2 உள்ள இனங்களுக்கு குத்தகை காலத்தமிற்கு பின்னர் மீண்டும் குத்தகைக்கு விடுவது பற்றி மாநகர மன்றம் முடிவு செய்யவும், மீண்டும் குத்தகைக்கு விடும் பட்சத்தில் புதிய குத்தகையாக கருதப்பட்டு தற்போதைய அரசு வழிகாட்டுதல்படி புதிய வாடகை நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மானம் எண் 42 நாள் 11.08.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆவின் பாலகம் மற்றும் டேன் டீ விற்பனை மையத்தினை மாற்று திறனாளிகள் பயனடையும் வண்ணம் ஒதுக்கீடு செய்யும் வகையில் குத்தகை உரிமம் வழங்க பரிசீலனை செய்ய தீர்மானிக்கப்பட்டதின் பேரில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண் 04675 / 2011/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 77 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 42 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

| | |
|---|---|
| பொருள் | கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு, வார்டு எண் 5 க்குட்பட்ட ஆஞ்சநேயர் காலனியில் கட்டப்படடுள்ள சமுதாயக் கூடம் 1305 சதுர அடிக்கு தினசரி வாடகை ரூ.305/- நிர்ணயம் செய்து மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் நிலையில் உள்ளது – வாடகைக்கு விடுதல் - குறித்து. |

கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு, வார்டு எண் 5 க்குட்பட்ட ஆஞ்சநேயர் காலனியில் கட்டப்படடுள்ள சமுதாயக் கூடம் 1305 சதுர அடிக்கு தினசரி வாடகை ரூ. 305/- நிர்ணயம் செய்து மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் நிலையில் உள்ளது.

மேற்படி கட்டிடப் பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விதிகளின்படி (2011-2012) தினசரி வாடகை ரூ. 305/- என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி வாடகையை நிர்ணயம் செய்யவும், இப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு கட்டிடம் பயனடைய அனுமதி வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மானம் எண் 40 நாள் 11.08.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 07287 / 2011/ED2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 78 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 40 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. முன் வைப்புத்தொகை ரூ. 1000 என நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

--------------------------------------------------------------------------------

**பொருள் எண் 12**

| | |
|---|---|
| பொருள் - | கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு, வார்டு எண் 15 க்குட்பட்ட இந்திரா நகர் தேசீய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சமுதாயக் கூடம் 2506 சதுர அடிக்கு தினசரி வாடகை ரூ. 858/- நிர்ணயம் செய்து மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் நிலையில் உள்ளது – வாடகைக்கு விடுதல் - குறித்து.<br>------ |

கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு, வார்டு எண் 15 க்குட்பட்ட இந்திரா நகர் தேசீய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம் 2506 சதுர அடிக்கு தினசரி வாடகை ரூ. 858/- நிர்ணயம் செய்து மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படும் நிலையில் உள்ளது.

மேற்படி கட்டிடப் பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விதிகளின்படி (2011-2012) தினசரி வாடகை ரூ.858/- என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி வாடகையை நிர்ணயம் செய்யவும், இப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு கட்டிடம் பயனடைய அனுமதி வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மானம் எண் 41 நாள் 11.08.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 07286 / 2011/ED2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 79 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 41 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. முன் வைப்புத்தொகை ரூ. 1000 என நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

--------------------------------------------------------------------------------

**பொருள் எண் 13**

பொருள்: பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளில் மாநகராட்சி சார்பில் வாதாட ஏற்கனவே உள்ள இரண்டு மாநகராட்சி வழக்கறிஞர்களுடன் கூடுதலாக ஒரு மாநகராட்சி வழக்கறிஞர் - நியமனம் செய்தல் தொடர்பாக.

*************

கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளில் மாநகராட்சி சார்பாக வாதாட கோவை மாநகர மாமன்ற தீர்மானம் எண் 83, நாள் 30.09.2009-ன் படி திரு. ஆர். சிவக்குமார் மற்றும் திரு. உ. கருகாணரன் ஆகிய வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டு மாநகராட்சி சார்பாக வாதாடி வருகின்றனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சி சொத்துவரி விதிப்பு தொடர்பான வழக்குகளில் மாநகராட்சிக்கு எதிராக கோவை மாவட்ட நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட 170-க்கும் மேற்பட்ட வழக்குகளில் மாநகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டியதைக் கருத்தில் கொண்டும், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் தற்போது மற்ற நகராட்சிகள், பேரூராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் இணைய இருப்பதால் வழக்குகளின் எண்ணிக்கை கூடுதலாகவும், புதிய வழக்குகள் தாக்கல் செய்யும் வாய்ப்பும் இருப்பதைக் கருத்தில் கொண்டும் மாநகராட்சி சார்பில் வாதாட மேலும் ஒரு வழக்கறிஞரை கூடுதலாக நியமிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆகவே, கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளில், ஏற்கனவே மாநகராட்சி வழக்குகளை கவனித்து வரும் திரு. ஆர். சிவக்குமார், மற்றும் திரு. உ. கருணாகரன் வழக்கறிஞர்களுடன் கூடுதலாக திரு. ஜே. சத்திய நாராயண பிரசாத் வழக்கறிஞரை மாநகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

தற்போது திரு.ஆர்.சிவக்குமார், மாநகராட்சி வழக்கறிஞருக்கு ரூ.7000/- மாதந்திர தொடர் கட்டணமாகவும் திரு.உ.கருணாகரன், மாநகராட்சி வழக்கறிஞருக்கு ரூ.5000/- மாதாந்திர தொடர் கட்டணமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் திரு. ஜே. சத்திய நாராயண பிரசாத், வழக்கறிஞர் அவர்களுக்கு மாதாந்திர தொடர் கட்டணமாக ரூ.5000/- வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க..எண். 10439/2009/எம்.சி.10

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 80 நாள் 12.09.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 14

பொருள்: பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட உச்ச நீதிமன்ற வழக்குகள் - மாநகராட்சி சார்பில் வாதாட வழக்கின் முக்கியத்துவம் கருதி வழக்கறிஞர் மற்றும் முதுநிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்தல் - வழக்கு கட்டணம் வழங்குதல் - தொடர்பாக.

*************

கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட, கோவை மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் உள்ளிட்ட அனைத்து நீதிமன்ற வழக்குகளிலும் மாநகராட்சி சார்பில் வழக்கறிஞர்கள் வாதாட மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டு மாநகராட்சி சார்பில் வழக்கை நடத்தி வருகின்றனர். மேலும், மேற்படி நீதிமன்றங்களில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கான வழக்கு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் வழங்க மாமன்ற தீர்மானம் எண் 157, நாள்: 29.12.2009 நிறைவேற்றப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளில் வழக்கின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் கருதி முதுநிலை வழக்கறிஞர் நியமனம் செய்யவும், அவர்களுக்கான வழக்குக் கட்டணம் வழங்கவும் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து மாமன்ற தீர்மானம் எண்.84, நாள்: 30.09.2009 நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்டுள்ள தீர்மானங்களின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட உச்ச நீதிமன்ற வழக்குகளில் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி மாநகராட்சி சார்பில் வாதாட வழக்கறிஞர் மற்றும் முதுநிலை வழக்கறிஞர் நியமனம் செய்யவும் அவர்களுக்கான வழக்குக் கட்டணம் வழங்கவும் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10439/2009/எம்.சி.10

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 81 நாள் 12.09.2011</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 15

| | |
|---|---|
| பொருள் - | கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1-5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியருக்கு 1 ஜோடி கேன்வாஸ் ஷீக்கள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் வழங்குதல் – சார்பு. |
| பார்வை - | கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தீர்மான எண். 2 நாள் 19.08.2011. |

------------------

அரசாணை (ப) எண் 236 நகராட்சி நர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந-2) துறை நாள் 17.05.2010-ன்படி 2010-2011-ம் கல்வி ஆண்டில் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1-5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி கேன்வாஸ் ஷீக்கள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) கோயம்புத்தூர் மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிட்டது. அதன் அடிப்படையில் கடந்த கல்வி ஆண்டில் 1-5-ம் வகுப்பு வரையில் உள்ள மாணவ, மாணவியருக்கு கேன்வாஸ் ஷீக்கள் (Canvas Shoes) மற்றும் காலுறைகள் (Socks) வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சி 2011-2012-ம் நிதியாண்டிற்கான வரவு - செலவு திட்டத்தில் மாநகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1-5-ம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி கேன்வாஸ் ஷீக்கள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) ஆண்டுதோறும் வழங்கப்படும் இதற்கென இந்நிதியாண்டியில் ரூ.20.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் 41 ஆரம்பப்பள்ளிகள் மற்றும் 14 நடுநிலைப்பள்ளிகளில் இக்கல்வியாண்டில் (2011-2012) 1-5-ம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி கேன்வாஸ் ஷீக்கள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) தரமானதாக வழங்க கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் அனுமதியுடன் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். எண்.5669/2011/கே 6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 82 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தில் BSUP திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வீட்டு இணைப்புகளுக்கு வைப்புத்தொகை பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்களித்து இணைப்புகள் வழங்க அரசாணை (நிலை) எண்.200 வீட்டுவசதி மற்றும் நகர அபிவிருத்தி துறை(HB4(1)) நாள் 15.09.2010 – ல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது – மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது - தொடர்பாக. -------------- |

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண்.82 நாள் 30.07.2010 மற்றும் ஆணையர் அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண்.12069/2006/ப.வ.(எம்) நாள் 03.08.2011-ல் BSUP திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வீட்டு இணைப்புகளுக்கு வைப்புத்தொகை பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்களித்து இணைப்புகள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.200 வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்தித்துறை (HB4(1)) 15.09.10-ம் தேதிய ஆணையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தில் BSUP திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு காலியிடவரி, கட்டிட உரிம கட்டணம், அபிவிருத்தி கட்டணம் மற்றும் வைப்பத்தொகை ஆகியவை பயனாளிகள் செலுத்துவதிலிருந்து விலக்களித்து உத்தரவிடப்பட்டுள்ளது .

எனவே அரசாணையில் குறிப்பிட்ட மேற்படி பொருள் தொடர்பாக நடைமுறைப்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.12069/2006/ப.வ.(எம்)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 83 நாள் 12.09.2011</u>**

அரசாணை (நிலை) எண் 200. வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்தித்துறை (HB4(1) ) 15.09.2010 ம் தேதிய ஆணையில் தெரிவித்துள்ளவாறு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தில் BSUP திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு காலியிடவரி, கட்டிட உரிம கம்டணம், அபிவிருத்திக் கட்டணம், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வீட்டிணைப்புகளுக்கான வைப்புத்தொகை, ஆய்வுக் கட்டணம், பாதாள சாக்கடை வரி, தொழிலாளர் நிதி (அல்லது) அது சம்பந்தமான மற்ற கட்டணம் (அல்லது) வரிகள், பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்களிக்கவும், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வீட்டிணைப்புகளுக்கான சேவைக் கட்டணம் ரூ. 250 மட்டும் வசூலிக்கவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி, **கிழக்கு மண்டலத்தில்** உள்ள தெருவிளக்குகளை கடந்த மூன்றாண்டுகளாக பராமரிக்கும் பணியினை மாமன்ற தீர்மான எண்.210 நாள் 29-08-2008-ன்படி தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாரரால் 27-09-2008 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தாரின் ஒப்பந்தக்காலம் வரும் 27-09-2011-ல் முடிவுபெற உள்ளதால் மேற்படி பராமரிப்பு பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளதால் இப்பணிக்கு மண்டல வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இத்திட்டத்தினை மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்த அனுமதியும் ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு 13-06-2011 அன்று பொருள் வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மான எண்.2 நாள் 13-06-2011-ல் இப்பொருளினை அனுமதித்தும் மேலும் நிபந்தனைகளை பணிகள் குழுவில் வைத்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. மண்டல வாரியாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை பணிக்குழு பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர பணிக்குழு தீர்மான எண்.521 நாள் 26-07-2011-ல் அனுமதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்பொழுது புதிய விலைப்பட்டியல் (New Schedule of Rates) அரசு வெளியிட்டுள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக பரிசீலனை மற்றும் ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு 03-08-2011 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்கவும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பின்னர் இறுதி செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுது கிழக்கு மண்டலத்தில் இப்பணியினை மேற்கொண்டு வரும் ''தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட்'' ஒப்பந்ததாரரின் 26-09-2011 அன்று முடியவுள்ள ஒப்பந்தக்காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வழங்க கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
கிழக்கு மண்டலத்தில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தி /ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தக் காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம்.

ந.க.எண்: 6476 /2008/ எம்.டி 4

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 84 நாள் 12.09.2011</u>

அவசர அவசியம் கருதி மூன்றுமாத காலத்திற்கு மட்டும் கால நீட்டிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி, **மேற்கு மண்டலத்தில்** உள்ள தெருவிளக்குகளை கடந்த மூன்றாண்டுகளாக பராமரிக்கும் பணியினை மாமன்ற தீர்மான எண்.212 நாள் 29-08-2008-ன்படி தி/ள் சால்ஜர் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாரரால் 27-09-2008 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தாரின் ஒப்பந்தக்காலம் வரும் 27-09-2011-ல் முடிவுபெற உள்ளதால் மேற்படி பராமரிப்பு பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளதால் இப்பணிக்கு மண்டல வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இத்திட்டத்தினை மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்த அனுமதியும் ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு 13-06-2011 அன்று பொருள் வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மான எண்.2 நாள் 13-06-2011-ல் இப்பொருளினை அனுமதித்தும் மேலும் நிபந்தனைகளை பணிகள் குழுவில் வைத்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. மண்டல வாரியாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை பணிக்குழு பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர பணிக்குழு தீர்மான எண்.521 நாள் 26-07-2011-ல் அனுமதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்பொழுது புதிய விலைப்பட்டியல் (New Schedule of Rates) அரசு வெளியிட்டுள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக பரிசீலனை மற்றும் ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு 03-08-2011 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்கவும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பின்னர் இறுதி செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுது மேற்கு மண்டலத்தில் இப்பணியினை மேற்கொண்டு வரும் ''தி/ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட்'' ஒப்பந்ததாரரின் 26-09-2011 அன்று முடியவுள்ள ஒப்பந்தக்காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வழங்க கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
மேற்கு மண்டலத்தில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தி /ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தக் காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம்.

ந.க.எண்: 6475 /2008/ எம்.டி 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 85 நாள் 12.09.2011**

அவசர அவசியம் கருதி மூன்றுமாத காலத்திற்கு மட்டும் கால நீட்டிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி, **வடக்கு மண்டலத்தில்** உள்ள தெருவிளக்குகளை கடந்த மூன்றாண்டுகளாக பராமரிக்கும் பணியினை மாமன்ற தீர்மான எண்.209 நாள் 29-08-2008-ன்படி தி/ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாரரால் 27-09-2008 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தாரின் ஒப்பந்தக்காலம் வரும் 27-09-2011-ல் முடிவுபெற உள்ளதால் மேற்படி பராமரிப்பு பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளதால் இப்பணிக்கு மண்டல வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இத்திட்டத்தினை மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்த அனுமதியும் ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு 13-06-2011 அன்று பொருள் வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மான எண்.2 நாள் 13-06-2011-ல் இப்பொருளினை அனுமதித்தும் மேலும் நிபந்தனைகளை பணிகள் குழுவில் வைத்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. மண்டல வாரியாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை பணிக்குழு பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர பணிக்குழு தீர்மான எண்.521 நாள் 26-07-2011-ல் அனுமதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்பொழுது புதிய விலைப்பட்டியல் (New Schedule of Rates) அரசு வெளியிட்டுள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக பரிசீலனை மற்றும் ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு 03-08-2011 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்கவும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பின்னர் இறுதி செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுது வடக்கு மண்டலத்தில் இப்பணியினை மேற்கொண்டு வரும் ''தி/ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட்'' ஒப்பந்ததாரரின் 26-09-2011 அன்று முடியவுள்ள ஒப்பந்தக்காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வழங்க கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
வடக்கு மண்டலத்தில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தி /ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தக் காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம்.

ந.க.எண்: 6477 /2008/ எம்.டி 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 86 நாள் 12.09.2011**

அவசர அவசியம் கருதி மூன்றுமாத காலத்திற்கு மட்டும் கால நீட்டிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி, **தெற்கு மண்டலத்தில்** உள்ள தெருவிளக்குகளை கடந்த மூன்றாண்டுகளாக பராமரிக்கும் பணியினை மாமன்ற தீர்மான எண்.211 நாள் 29-08-2008-ன்படி தி/ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தாரரால் 27-09-2008 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தாரின் ஒப்பந்தக்காலம் வரும் 27-09-2011-ல் முடிவுபெற உள்ளதால் மேற்படி பராமரிப்பு பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளதால் இப்பணிக்கு மண்டல வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இத்திட்டத்தினை மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்த அனுமதியும் ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு 13-06-2011 அன்று பொருள் வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மான எண்.2 நாள் 13-06-2011-ல் இப்பொருளினை அனுமதித்தும் மேலும் நிபந்தனைகளை பணிகள் குழுவில் வைத்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. மண்டல வாரியாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை பணிக்குழு பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோர பணிக்குழு தீர்மான எண்.521 நாள் 26-07-2011-ல் அனுமதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்பொழுது புதிய விலைப்பட்டியல் (New Schedule of Rates) அரசு வெளியிட்டுள்ளதால் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிபந்தனைகள் மற்றும் விலைகள் தொடர்பாக பரிசீலனை மற்றும் ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு 03-08-2011 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரகம் பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்கவும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பின்னர் இறுதி செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுது தெற்கு மண்டலத்தில் இப்பணியினை மேற்கொண்டு வரும் ‘‘தி/ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட்’’ ஒப்பந்ததாரரின் 26-09-2011 அன்று முடியவுள்ள ஒப்பந்தக்காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வழங்க கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
தெற்கு மண்டலத்தில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தி /ள் சால்ஜா் எலெக்ட்ரானிக்ஸ் லிட் நிறுவனத்தின் ஒப்பந்தக் காலத்தினை புதிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம்.

ந.க.எண்: 6474 /2008/ எம்.டி 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 87 நாள் 12.09.2011</u>**

அவசர அவசியம் கருதி மூன்றுமாத காலத்திற்கு மட்டும் கால நீட்டிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண்.42 கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றுக்கு குறுக்கே கட்டப்பட உள்ள உயர்மட்ட பாலத்திற்கு அமைத்தல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.42-ல் கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் நொய்யல் ஆற்றுக்கே குறுக்கே தற்போது அமைக்கப்பட்டுள்ள குழாய் சிறுபாலம் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதாலும், மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளத்தின் காரணத்தால் வாகனங்கள் இவ்வாற்றை கடக்க இயலாத காரணத்தாலும், பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு உடனடியாக கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்லும் சாலையில் உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டி உள்ளது. இதனால் சுமார் இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பயன்பெறுவார்கள். மேலும் இந்த இடத்தினை 16-06-2011-ம் தேதியில் நேராய்வு செய்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வேண்டுகோளின்படி இப்பணியிணை செய்யுமாறு உத்திரவிட்டார்.

அவரது உத்திரவின்பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட பாலத்தின் பராமரிப்பு பணி இதுநாள் வரை மாநகராட்சியால் செய்யப்படவில்லை. எனவே, நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையிடம் விபரம் கோரப்பட்டது. மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை அவரின் தனது 10-08-2011-ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பாலம் 1957-ம் ஆண்டுக்கு முன்பு நெடுஞ்சாலைத்துறை பொதுப்பணித்துறையின் அங்கமாக இருந்தபோது கட்டப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் தற்போது இத்துறையிடம் அதற்கான ஆவணங்கள் ஏதுமில்லை என்றும், தற்போதுவரை இந்த தரைமட்ட பாலத்தினை தங்கள் துறையினரால் மராமத்து ஏதும் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளர். மேலும், தற்போது பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்பார்வைப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை அவர்கள் தனது 12-08-2011-ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பாலம் தங்களது பராமரிப்பில் இல்லை என தெரிவித்துள்ளார்.

பாலத்தின் கிழக்கு திசையில் உள்ள சாலை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மேற்கு திசையில் உள்ள சாலை குனியமுத்தூர் நகராட்சியில் வருகிறது. குனியமுத்தூர் நகராட்சி

மாநகராட்சியுடன் இணையவுள்ளதாலும் மேலும் பணியின் அவசியத்தையும், இன்றியமையாமையினையும் கருத்திற்கொண்டும் கோயம்புத்தூரிலிருந்து சுண்டக்காமுத்தூர் செல்வதற்கு ஏதுவாக உயர்மட்ட பாலம் கட்ட ரூ2.25 கோடி மதிப்பீட்டுத் தொகையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பணிக்கு தேவையான நிதி நடப்பு 2011-2012 நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு உள்ளது. எனவே இப்பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் பரிந்துரைக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றத்தின் முடிவிற்கு ந.க.எண். 5162/2011/ எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 88 நாள் 12.09.2011</u>**

பொருள் ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**<u>பொருள் எண்: 22</u>**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **<u>கிழக்கு</u>** வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **<u>துப்புரவு பணிகள்</u>** மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணி - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

-----------------

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ்கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு வார்டுக் குழுவிற்குட்பட்ட பகுதிகளில் காளப்பட்டி பேரூராட்சி, விளாங்குறிச்சி கிராம ஊராட்சி ஆகிய 2 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு வார்டுக் குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையுள்ளதால் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் வரும் 31-03-2012 வரை (158 நாட்களுக்கு) ஈடுபடுத்தப்படவேண்டிய நிலையுள்ளது.

எனவே விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு வார்டுக் குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள 2 உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் திறன்பட மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக 85 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.30,50,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7553/2011/ எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 89 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 23

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **வடக்கு** வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **துப்புரவு பணிகள்** மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணி - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

-----------------

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் வெள்ளக்கினர் பேரூராட்சி, துடியலூர் பேரூராட்சி, சின்னவேடம்பட்டி பேரூராட்சி, சரவணம்பட்டி பேரூராட்சி ஆகிய 4 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையுள்ளதால் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் வரும் 31-03-2012 வரை (158 நாட்களுக்கு) ஈடுபடுத்தப்படவேண்டிய நிலையுள்ளது.

எனவே விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள 4 உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் திறன்பட மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக 142 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.51,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7552/2011/ எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 90 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 24

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **<u>தெற்கு</u>** வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **<u>துப்புரவு பணிகள்</u>** மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணி - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் குறிச்சி நகராட்சி,குனியமுத்தூர் நகராட்சி ஆகிய 2 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையுள்ளதால் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் வரும் 31-03-2012 வரை (158 நாட்களுக்கு) ஈடுபடுத்தப்படவேண்டிய நிலையுள்ளது.

எனவே விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள 2 உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் திறன்பட மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக 188 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.67,50,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7551/2011/ எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 91 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்: 25**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **மேற்கு** வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **துப்புரவு பணிகள்** மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தும் பணி - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் வீரகேரளம் பேரூராட்சி, வடவள்ளி பேரூராட்சி, கவுண்டம்பாளையம் நகராட்சி ஆகிய 3 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையுள்ளதால் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் வரும் 31-03-2012 வரை (158 நாட்களுக்கு) ஈடுபடுத்தப்படவேண்டிய நிலையுள்ளது.

எனவே விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு வார்டுக்குழுவிற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள 3 உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் துப்புரவு பணிகள் திறன்பட மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக 113 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.40,62,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.7550/2011/ எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 92 நாள் 12.09.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்: 26**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **கிழக்கு** மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **குடிநீர் விநியோகம்** மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பணிகள் மேற்கொள்தல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

---------------

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் காளப்பட்டி பேரூராட்சி, விளாங்குறிச்சி கிராம ஊராட்சி ஆகிய 2 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் கீழ்கண்டுள்ளபடி குடிநீர் அமைப்புகள் உள்ளன.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | மக்கள் தொகை | பிரதான குழாய் நீளம் (மீ) | நீர்தேக்கத் தொட்டியின் எண்ணிக்கை | குழாய் இணைப்பு களின் எண்ணிக்கை | குடிநீர் பணியாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந்தரம் | தற்காலிகம் |
| 1 | காளப்பட்டி பேரூராட்சி | 26441 | 9500.00 | 14 | 10570 | - | 16 |
| 2 | விளாங்குறிச்சி கிராம ஊராட்சி | 14000 | 7000.00 | 24 | 5549 | 5 | 4 |

மேற்படி கிராம ஊராட்சி /பேரூராட்சி அமைப்புகளிலுள்ள நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், பராமரித்தல், நீரேற்று நிலையம் மற்றும் நீருந்து நிலையம் இயக்குதல், காவல்பணி மேற்கொள்ளுதல், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், குடிநீர் குழாய் துண்டிப்பு செய்தல், மறு இணைப்பு வழங்குதல் மற்றும் பொது குடிநீர் குழாய்கள் பராமரித்தல் போன்ற பணிகளுக்கு தற்பொழுது மேற்படி ஊராட்சி அமைப்புகளிலுள்ள குறைந்த பணியாள்களைக் கொண்டு பணிகளை திறம்பட மேற்கொள்ள இயலாது என்பதால் தற்பொழுது மாநகராட்சி பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதுபோல் மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், தளவாடபொருட்கள் வாங்கி வழங்குதல் மற்றும் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள 31.03.2012 வரையான காலத்திற்கு மதிப்பீடு ரூ.87.75 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டியும் தற்பொழுது மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களுடன் சேர்த்து தொடர்ந்து அதே ஊதிய விகிதத்தில் அரசு உத்தரவு வரும் வரை பணியாற்றவும் அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5263/2011/ (எம்.டி 2) எம்.டி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 93 நாள் 12.09.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்: 27**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **மேற்கு** மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **குடிநீா் விநியோகம்** மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பணிகள் மேற்கொள்தல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

---------------

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வடவள்ளி பேரூராட்சி மற்றும் வீரகேரளம் பேரூராட்சி ஆகிய 2 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் கீழ்கண்டுள்ளபடி குடிநீா் அமைப்புகள் உள்ளன.

| வ. எண் | ஊராட்சியின் பெயா் | மக்கள் தொகை | பிரதான குழாய் நீளம் (மீ) | நீா்தேக்கத் தொட்டியின் எண்ணிக்கை | குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை | குடிநீா் பணியாளா்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந்தரம் | தற்காலிகம் |
| 1 | வடவள்ளி பேரூராட்சி | 29735 | 121350 | 11 | 7851 | 15 | 9 |
| 2 | வீரகேரளம் பேரூராட்சி | 23993 | 92000 | 10 | 5884 | 4 | 9 |
| 3 | கவுண்டம் பாளையம் நகராட்சி | 98919 | 119250 | 11 | 16207 | 5 | - |

மேற்படி கிராம ஊராட்சி /பேரூராட்சி அமைப்புகளிலுள்ள நீா்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீா் விநியோகம் மேற்கொள்ளுதல், பராமரித்தல், நீரேற்று நிலையம் மற்றும் நீருந்து நிலையம் இயக்குதல், காவல்பணி மேற்கொள்ளுதல், குடிநீா் குழாய் இணைப்புகள் வழங்குதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், குடிநீா் குழாய் துண்டிப்பு செய்தல், மறு இணைப்பு வழங்குதல் மற்றும் பொது குடிநீா் குழாய்கள் பராமரித்தல் போன்ற பணிகளுக்கு தற்பொழுது மேற்படி ஊராட்சி அமைப்புகளிலுள்ள குறைந்த பணியாள்களைக் கொண்டு பணிகளை திறம்பட மேற்கொள்ள இயலாது என்பதால் தற்பொழுது மாநகராட்சி பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதுபோல் மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் நீா்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீா் விநியோகம் மேற்கொள்ளுதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், தளவாடபொருட்கள் வாங்கி வழங்குதல் மற்றும் குடிநீா் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள 31.03.2012 வரையான காலத்திற்கு மதிப்பீடு ரூ.98.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டியும் தற்பொழுது மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாள்களுடன் சேர்த்து தொடர்ந்து அதே ஊதிய விகிதத்தில் அரசு உத்தரவு வரும் வரை பணியாற்றவும் அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5263 /2011/ (எம்.டி2) எம்.டி. 3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 94 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண்: 28

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **வடக்கு** மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **குடிநீர் விநியோகம்** மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பணிகள் மேற்கொள்தல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் துடியலூர் பேரூராட்சி, வெள்ளக்கிணறு பேரூராட்சி, சின்னவேடம்பட்டி பேரூராட்சி மற்றும் சரவணம்பட்டி பேரூராட்சி ஆகிய 4 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் கீழ்கண்டுள்ளபடி குடிநீர் அமைப்புகள் உள்ளன.

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | மக்கள் தொகை | பிரதான குழாய் நீளம் (மீ) | நீர்தேக்கத் தொட்டியின் எண்ணிக்கை | குழாய் இணைப்பு களின் எண்ணிக்கை | குடிநீர் பணியாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந்தரம் | தற்காலிகம் |
| 1 | துடியலூர் பேரூராட்சி | 25505 | 66668.00 | 3 | 7721 | 5 | - |
| 2 | வெள்ளக்கினறு பேரூராட்சி | 11726 | 13624 | 3 | 3017 | 6 | 4 |
| 3 | சின்னவேடம் பட்டி பேரூராட்சி | 13177 | 27500 | 4 | 3550 | - | 2 |
| 4 | சரவணம்பட்டி பேரூராட்சி | 21284 | 79000 | 7 | 6443 | - | 6 |

மேற்படி கிராம ஊராட்சி /பேரூராட்சி அமைப்புகளிலுள்ள நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், பராமரித்தல், நீரேற்று நிலையம் மற்றும் நீருந்து நிலையம் இயக்குதல், காவல்பணி மேற்கொள்ளுதல், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், குடிநீர் குழாய் துண்டிப்பு செய்தல், மறு இணைப்பு வழங்குதல் மற்றும் பொது குடிநீர் குழாய்கள் பராமரித்தல் போன்ற பணிகளுக்கு தற்பொழுது மேற்படி ஊராட்சி அமைப்புகளிலுள்ள குறைந்த பணியாள்களைக் கொண்டு பணிகளை திறம்பட மேற்கொள்ள இயலாது என்பதால் தற்பொழுது மாநகராட்சி பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதுபோல் மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், தளவாடபொருட்கள் வாங்கி வழங்குதல் மற்றும் குடிநீர் அபிவிருத்தி பணிகள்

மேற்கொள்ள 31.03.2012 வரையான காலத்திற்கு மதிப்பீடு ரூ.98.90 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டியும் தற்காலிக பணியாளர்களுடன் சேர்த்து தொடர்ந்து அதே ஊதிய விகிதத்தில் அரசு உத்தரவு வரும் வரை பணியாற்றவும் அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.5263 /2011/ (எம்.டி. 2) எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 95 நாள் 12.09.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 29

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - விரிவுப்படுத்தப்பட்ட மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள **தெற்கு** மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் இணையவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **குடிநீர் விநியோகம்** மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பணிகள் மேற்கொள்தல் - மதிப்பீடு தயாரிக்கப்பட்டது – நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

பார்வை: அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 25-08-2011.

பார்வையில் கண்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் கீழ் கண்ட 11 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1) குறிச்சி நகராட்சி
2) குனியமுத்தூர் நகராட்சி
3) கவுண்டம்பாளையம் நகராட்சி
4) துடியலூர் பேரூராட்சி
5) வெள்ளக்கினர் பேரூராட்சி
6) சின்னவேடம்பட்டி பேரூராட்சி
7) சரவணம்பட்டி பேரூராட்சி
8) காளப்பட்டி பேரூராட்சி
9) வடவள்ளி பேரூராட்சி
10) வீரகேரளம் பேரூராட்சி
11) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

மேற்கூறிய அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் 72 வார்டுகள் என்ற தற்போதைய எண்ணிக்கையை மாற்றிமைத்து, விரிவுப்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 வார்டுகள் என நிர்ணயம் செய்யும் வகையில் தமிழ்நாடு சட்டம் 8/2011 ன் வாயிலாக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் தக்க திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் எல்லையினை விரிவுப்படுத்தப்படும் பட்சத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வடவள்ளி பேரூராட்சி, கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வீரகேரளம் பேரூராட்சி ஆகிய 3 உள்ளாட்சி அமைப்புகள் இணையும்.

விரிவுப்படுத்தப்படும் மாநகராட்சியின் உத்தேசிக்கப்பட்டுள்ள தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தற்பொழுது இணையவுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் கீழ்கண்டுள்ளபடி குடிநீர் அமைப்புகள் உள்ளன.

| வ. எ ண் | ஊராட்சியின் பெயர் | மக்கள் தொகை | பிரதான குழாய் நீளம் (மீ) | நீர்தேக்கத் தொட்டியின் எண்ணிக்கை | குழாய் இணைப்பு களின் எண்ணிக்கை | குடிநீர் பணியாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந்தரம் | தற்காலிகம் |
| 1 | குறிச்சி நகராட்சி | 159523 | 149700 | 6 | 15581 | 6 | 4 |
| 2 | குனியமுத்தூர் நகராட்சி | 120688 | 127000 | 16 | 13539 | 1 | - |

மேற்படி கிராம ஊராட்சி /பேரூராட்சி அமைப்புகளிலுள்ள நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், பராமரித்தல், நீரேற்று நிலையம் மற்றும் நீருந்து நிலையம் இயக்குதல், காவல்பணி மேற்கொள்ளுதல், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், குழாய் கசிவுகள் சரிசெய்தல், குடிநீர் குழாய் துண்டிப்பு செய்தல், மறு இணைப்பு வழங்குதல் மற்றும் பொது குடிநீர் குழாய்கள் பராமரித்தல் போன்ற பணிகளுக்கு தற்பொழுது மேற்படி ஊராட்சி அமைப்புகளிலுள்ள குறைந்த பணியாளர்களைக் கொண்டு பணிகளை திறம்பட மேற்கொள்ள இயலாது என்பதால் தற்பொழுது மாநகராட்சி பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்வதுபோல் மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் மூலம் ஒப்பந்த முறையில் நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல், குழாய் கசிவுகள்

சரிசெய்தல், தளவாடபொருட்கள் வாங்கி வழங்குதல் மற்றும் குடிநீா் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள 31.03.2012 வரையான காலத்திற்கு மதிப்பீடு ரூ.82.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிா்வாக அனுமதி வேண்டியும் தற்பொழுது மேற்கூறிய உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளா்களுடன் சேர்த்து தொடா்ந்து அதே ஊதிய விகிதத்தில் அரசு உத்தரவு வரும் வரை பணியாற்றவும் அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண். 5263 /2011/(எம்.டி. 2) எம்.டி3

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 96 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 30

கோயம்புத்தூா் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் கீழ்க்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அரசாணை (நிலை) எண். 49 ந.நி. (ம) கு.வ. (தேர்தல்) துறை நாள். 22.02.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 72 ந.நி. (ம) கு.வ. (தேர்தல்) துறை நாள். 12.05.2011 படி தற்போதுள்ள கோவை மாநகராட்சியில் இணைந்து அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு பின் இயங்கப்படவுள்ளது.

1. குறிச்சி நகராட்சி
2. குனியமுத்தூா் நகராட்சி
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. சரவணம்பட்டி பேரூராட்சி
5. காளப்பட்டி பேரூராட்சி
6. வடவள்ளி பேரூராட்சி
7. துடியலூா் பேரூராட்சி
8. வீரகேரளம்பேரூராட்சி
9. வெள்ளக்கிணா் பேரூராட்சி
10. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

தற்சமயம் கோவை மாநகராட்சியில் பில்லூா் இரண்டாவது குடிநீா் திட்டம் ரூ.113.74 கோடி திட்ட மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றது. மாநகரப்பகுதியில் தற்போது பெறப்படும் சிறுவாணி குடிநீா் மற்றும் பில்லூா் இரண்டாவது குடிநீா் திட்டத்தில் பெறப்படும் குடிநீரினைக் கொண்டு சீரான குடிநீா் விநியோகம் நபா் ஒருவருக்கு நாளொன்றுக்கு 135லிட்டா் என்ற விகிதத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்நிலையில் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடை திட்டம் கூடுதலாக செயல்படுத்த உரிய திட்ட மதிப்பீடு தற்போது குடிநீா் வடிகால் வாரியத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுவரும் குடிநீா் அளவு, மாநகர பகுதியில் வழங்கப்படவேண்டிய நாளொன்றுக்கு 135 லிட்டா் (எல்.பி.சி.டி.) விகிதத்தில் CPHEEO வழிகாட்டுதலின் படி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியம் மூலமாக கூடுதல் குடிநீா் வழங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் உள்ளாட்சி மன்றங்களில் அனுமதி பெறப்பட்டு உள்ளாட்சிகளால் ஆய்வு கட்டணங்கள் கீழகண்டவாறு செலுத்தப்பட்டு தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியத்தால் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கையில் கூடுதல் மேல்நிலை குடிநீா்த் தொட்டிகள் மற்றும் பகிா்மான குழாய்கள் பதிப்பதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என அறியப்பட்டது.

கீழ்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அவைகளுக்குண்டான மதிப்பீட்டுத் தொகையில் பங்களிப்புதொகையினை (ரூ இலட்சத்தில்) கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியுள்ளதாக தெரிய வருகிறது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்புகள் | உள்ளாட்சிகளின் | செலுத்திய | செலுத்தப்பட |
|---|---|---|---|---|

| | | பங்களிப்பு (ரூ இலட்சம் ) | தொகை (ரூ இலட்சம் ) | வேண்டிய தொகை (ரூ இலட்சம் ) |
|---|---|---|---|---|
| 1 | துடியலூர் பேரூராட்சி | 282.06 | 119.00 | 163.06 |
| 2 | வெள்ளக்கிணர் பேரூராட்சி | 112.99 | 0 | 112.99 |
| 3 | சரவணம்பட்டி பேரூராட்சி | 667.12 | 0 | 667.12 |
| 4 | சின்னவேடம்பட்டி பேரூராட்சி | 190.88 | 0 | 190.88 |
| 5 | காளப்பட்டி பேரூராட்சி | 473.95 | 16.00 | 457.95 |

இது தவிர கீழ்க்கண்ட உள்ளாட்சிகள் கூடுதல் குடிநீர் பெற திட்ட அறிக்கை, திட்ட மதிப்பீடு தாயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கீழ்குறிப்பிட்டுள்ள ஆய்வு தொகையினை செலுத்த அந்தந்த உள்ளாட்சி மன்றங்களில் ஒப்புதல் பெற்று ஆய்வு கட்டண தொகையினை செலுத்தி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திணரால் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்புகள் | ஆய்வு கட்டணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்திய தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடவள்ளி பேரூராட்சி | 2.37 |
| 2 | வீரகேரளம் பேரூராட்சி | 5.85 |
| 3 | கவுண்டம்பாளையம் நகராட்சி | 5.03 |

இது தவிர கீழ்க்கண்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் குடிநீர் திட்டங்கள் இணைந்து செயல்படுத்தி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | நகராட்சிகள் | செயல்படுத்தப்பட்டு வரும் திட்டம் |
|---|---|---|
| 1 | குறிச்சி நகராட்சி | குறிச்சி குனியமுத்தூர் கிணத்துக் கடவு திட்டம் |
| 2 | குனியமுத்தூர் நகராட்சி | குறிச்சி குனியமுத்தூர் கிணத்துக் கடவு திட்டம் |
| 3 | கவுண்டம்பாளையம் நகராட்சி | கவுண்டம்பாளையம் வடவள்ளி குடிநீர் திட்டம் |

மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் இனி வரும் காலங்களில் மாநகராட்சி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கப்படவுள்ள நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை 2010ம்ஆண்டு மக்கள் தொகைக்கு கணக்கிற்கொண்டும் தினசரி நபர் ஒருவருக்கு CPHEEO வழிகாட்டுதலின்படி நாளொன்றுக்கு 135லிட்டர் என்ற விகிதத்தில் குடிநீர் வழங்கத்தக்க வகையில் வடிவமைத்து ஒருங்கிணைந்த குடிநீர் திட்ட அறிக்கையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவே தயாரிக்கவும் அதற்கான நிதியினை ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்ட தொகை நீங்கலாக மீதம் செலுத்தப்படவேண்டிய ஆய்வு தொகையினை அரசிடமிருந்து திட்ட அறிக்கை தயாரிப்பு நிதியிலிருந்து (Project Preparation Fund-PPF) பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக உரிய முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

அ. மாநகராட்சி விரிவாக்க பகுதிகளில் வரும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் ஒருங்கிணைந்து குடிநீர் திட்டத்தினை செயல்படுத்தப்படும்வகையில் ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் மூலமாக தயாரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாகதயாரிக்கப்படும்திட்டஅறிக்கைக்கு உள்ளாட்சி அமைப்புகள் செலுத்திய கட்டணத் தொகை நீங்கலாக மீதம் செலுத்தப்பட வேண்டிய ஆய்வு கட்டணம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையினை அரசின் திட்ட அறிக்கை தயாரிப்புநிதியிலிருந்து (Project Preparation Fund - PPF) பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ. திட்ட அறிக்கை தயாரிக்க ஆகும் உத்தேச மொத்த செலவினத் தொகையினை அரசால் அனுமதிக்கப்படும் நிதிக்குள் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை கேட்டுக்கொள்ளலாம்.

ந.க.எண் .1987/2010/ப.வ.(எம்)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 97 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு அ, ஆ, இ அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 31

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் **<u>கிழக்கு</u>** மண்டலத்தில் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **<u>தெருவிளக்கு</u>** பராமரிப்பு பணி மேற்கொள்வது குறித்து.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் கீழ்க்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அரசாணை (நிலை) எண்.49 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 22-02-2011, அரசாணை (நிலை) எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 12-05-2011 மற்றும் அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 25-08-2011, படி தற்போதுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைந்து அடுத்துவரும் உள்ளாட்சி தேர்தலுக்குப்பின் இயங்கப்படவுள்ளது.

1. குறிச்சி நகராட்சி
2. குனியமுத்தூர் நகராட்சி
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. சரவணம்பட்டி பேரூராட்சி
5. காளப்பட்டி பேரூராட்சி
6. வடவள்ளி பேரூராட்சி
7. துடியலூர் பேரூராட்சி
8. வீரகேரளம் பேரூராட்சி
9. வெள்ளக்கிணர் பேரூராட்சி
10. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 37,129 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளுக்கு பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ 4.19 கோடி மதிப்பீட்டில் மூன்றாண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் மிகக்குறைந்த அளவிலான பணியாளர்களை கொண்டு தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தற்பொழுது கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வது போல இப்பணியினையினையும் மேற்கொள்ளுவது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளில் கிழக்கு மண்டலத்துடன் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளான (1) காளப்பட்டி பேரூராட்சி (2) விளாங்குறிச்சி கிராம ஊராட்சி பகுதிகளில் உள்ள **3108** எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மற்றும் சுவிட்ச் ஆன்.ஆ~ப் (On & OFF) பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு **ரூ20.20** இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ20.20** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.5263/2011/(எம்.டி. 2) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 98 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 32

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் **மேற்கு** மண்டலத்தில் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **தெருவிளக்கு** பராமரிப்பு பணி மேற்கொள்வது குறித்து.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் கீழ்க்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அரசாணை (நிலை) எண்.49 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 22-02-2011, அரசாணை (நிலை) எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 12-05-2011 மற்றும் அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 25-08-2011, படி தற்போதுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைந்து அடுத்துவரும் உள்ளாட்சி தேர்தலுக்குப்பின் இயங்கப்படவுள்ளது.

1. குறிச்சி நகராட்சி
2. குனியமுத்தூர் நகராட்சி
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. சரவணம்பட்டி பேரூராட்சி
5. காளப்பட்டி பேரூராட்சி
6. வடவள்ளி பேரூராட்சி
7. துடியலூர் பேரூராட்சி
8. வீரகேரளம் பேரூராட்சி
9. வெள்ளக்கிணர் பேரூராட்சி
10. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 37,129 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளுக்கு பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ 4.19 கோடி மதிப்பீட்டில் மூன்றாண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் மிகக்குறைந்த அளவிலான பணியாளர்களை கொண்டு தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தற்பொழுது கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வது போல இப்பணியினையினையும் மேற்கொள்ளுவது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கு மண்டலத்துடன் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளான (1)கவுண்டம்பாளையம் நகராட்சி (2) வடவள்ளி பேரூராட்சி மற்றும் (3) வீரகேரளம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள **9339** எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மற்றும் சுவிட்ச் ஆன்.ஆ~ப் (On & OFF) பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு **ரூ52.40** இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ52.40** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 5263/2011/(எம்.டி. 2) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 99 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்: 33**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் **வடக்கு** மண்டலத்தில் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **தெருவிளக்கு** பராமரிப்பு பணி மேற்கொள்வது குறித்து.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் கீழ்க்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அரசாணை (நிலை) எண்.49 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 22-02-2011, அரசாணை (நிலை) எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 12-05-2011 மற்றும் அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 25-08-2011, படி தற்போதுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைந்து அடுத்துவரும் உள்ளாட்சி தேர்தலுக்குப்பின் இயங்கப்படவுள்ளது.

1. குறிச்சி நகராட்சி
2. குனியமுத்தூர் நகராட்சி
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. சரவணம்பட்டி பேரூராட்சி
5. காளப்பட்டி பேரூராட்சி
6. வடவள்ளி பேரூராட்சி
7. துடியலூர் பேரூராட்சி
8. வீரகேரளம் பேரூராட்சி
9. வெள்ளக்கிணர் பேரூராட்சி
10. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 37,129 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளுக்கு பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ 4.19 கோடி மதிப்பீட்டில் மூன்றாண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் மிகக்குறைந்த அளவிலான பணியாளர்களை கொண்டு தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தற்பொழுது கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வது போல இப்பணியினையினையும் மேற்கொள்ளுவது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளில் வடக்கு மண்டலத்துடன் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளான (1) சரவணம்பட்டி பேரூராட்சி (2)வெள்ளக்கிணர் பேரூராட்சி (3)சின்னவேடம்பட்டி பேரூராட்சி (4) துடியலூர் பேரூராட்சி பகுதிகளில் உள்ள **5863** எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மற்றும் சுவிட்ச் ஆன்.ஆ~ப் (On & OFF) பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு **ரூ36.00** இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ36.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 5263/2011/(எம்.டி. 2) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 100 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்: 34**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் **<u>தெற்கு</u>** மண்டலத்தில் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் **<u>தெருவிளக்கு</u>** பராமரிப்பு பணி மேற்கொள்வது குறித்து.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தில் கீழ்க்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் அரசாணை (நிலை) எண்.49 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 22-02-2011, அரசாணை (நிலை) எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 12-05-2011 மற்றும் அரசாணை (நிலை) எண்.114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) துறை நாள் 25-08-2011, படி தற்போதுள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைந்து அடுத்துவரும் உள்ளாட்சி தேர்தலுக்குப்பின் இயங்கப்படவுள்ளது.

1. குறிச்சி நகராட்சி
2. குனியமுத்தூர் நகராட்சி
3. கவுண்டம்பாளையம் நகராட்சி
4. சரவணம்பட்டி பேரூராட்சி
5. காளப்பட்டி பேரூராட்சி
6. வடவள்ளி பேரூராட்சி
7. துடியலூர் பேரூராட்சி
8. வீரகேரளம் பேரூராட்சி
9. வெள்ளக்கிணர் பேரூராட்சி
10. சின்னவேடம்பட்டி பேரூராட்சி
11. விளாங்குறிச்சி கிராம ஊராட்சி

தற்சமயம் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள 37,129 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளுக்கு பராமரிப்பு பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ 4.19 கோடி மதிப்பீட்டில் மூன்றாண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் மிகக்குறைந்த அளவிலான பணியாளர்களை கொண்டு தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தற்பொழுது கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வது போல இப்பணியினையினையும் மேற்கொள்ளுவது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளில் தெற்கு மண்டலத்துடன் இணைய உள்ள உள்ளாட்சி அமைப்புகளான (1) குறிச்சி நகராட்சி (2) குனியமுத்தூர் நகராட்சி பகுதிகளில் உள்ள **9757** எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மற்றும் சுவிட்ச் ஆன்.ஆ~ப் (On & OFF) பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு **ரூ54.40** இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ54.40** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 5263/2011/(எம்.டி. 2) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 101 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண்: 35

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு.33-ல் சிவானந்தா காலனி பூங்கா வளாகத்தில் கட்டப்பட்ட யோகா மையத்தை சிவானந்தா காலனி குடியிருப்போர் நல சங்கத்திற்கு ஒப்படை செய்வது- தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்..33-க்கு உட்பட்ட சிவானந்தா காலனி பூங்கா வளாகத்தில் புதியதாக கட்டப்பட்ட 62.23 சதுர மீட்டர் கொண்ட யோகா மையம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இப்பூங்கா தனியார் நிறுவனமான M/s. திரிசா கார்டன்ஸ் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சிக்கு சொந்தமான இக்கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறை அரசு வழிகாட்டி மதிப்பில் மாத வாடகையாக ரூ.12,450/- என நிர்ணயம் செய்து உதவி பொறியாளர் குறிப்பளித்துள்ளார்.

சிவானந்தா காலனி குடியிருப்போர் நலச்சங்கத்தின் செயலாளர் தனது 20.07.2011-ம் தேதியிட்ட கடிதத்தில் மேற்கண்ட யோகா மையத்தினை பொதுமக்கள் உபயோகப்படுத்த மாநகராட்சி நிர்ணயம் செய்யும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசமாக நடத்திக் கொள்ளவும், யோகா மையத்தில் எந்தவித பணபயனின்றி பராமரித்துக் கொள்வதாகவும் அதனடிப்படையில் தங்கள் சங்கத்திற்கு ஒப்படைக்கும்படி கோரியுள்ளனர்.

வார்டு எண். 33-ன் மாமன்ற உறுப்பினர் மேற்கண்ட யோகா மையத்தை சிவானந்தா காலனி குடியிருப்போர் நலச்சங்கம் மூலம் இலவசமாக பராமரிக்க ஒப்படை செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மாநகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கட்டிடங்கள், கடைகள் முதலியன வருவாய் தரக்கூடிய இனங்கள், பொது ஏலம் தவிர்த்து முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய விதிகளில் வழி வகை இல்லை. ஆனால், இப்பூங்கா வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள யோகா மையம் இம்மாநகராட்சியில் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ள புது மாதிரியான முயற்சியாகும். இதில், இப்பகுதியில் வசித்துவரும் பொதுமக்கள் மிகுந்த அளவில் பலன் பெறுவர். இந்த யோகா மையத்தை பிற வணிக வளாக கட்டிடங்களோடு ஒப்பிட்டு பொது ஏலம் முறையில் ஒதுக்கீடு செய்ய இயலாது.

இந்நிலையில் மேற்படி யோகா மையத்தின் பராமரிப்பை குறைந்த பட்ச வாடகை நிர்ணயம் செய்து குடியிருப்போர் நல சங்கத்திற்கு நிபந்தனைகளுடன் ஒப்படை செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 11.08.2011-ம் தேதிய தீர்மான எண்.39-ல் மேற்படி யோகா மையத்தை திருத்திய நிபந்தனைகளின்படி அனுமதிக்கலாம் என ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.05980/11/அ8(வ)

யோகா மையத்தை பராமரிக்க சிறப்பு நிபந்தனைகள்

1. யோகா மையத்தின் துப்புரவு பணியை பராமரிக்கவும், தேவையான பணியாளர்களை ஏற்பாடு செய்வதுடன் பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் வழங்க வேண்டிய இதர தொகைகளுக்கு அனுமதி பெற்றவர்களே பொறுப்பாவார்.
2. யோகா மைய கட்டிடத்தின் பராமரிப்பு மாநகராட்சி வசம் இருக்கும்.
3. யோகா மைய எல்லைக்குள் தற்காலிகமாக கொட்டகை, கடைகள் போன்றவை ஏற்படுத்தக்கூடாது.
4. நிலையங்களிலுள்ள காலியிடங்களில் ஆணையரது இசைவின்றி ஆணை பெற்றவர் தன் சொந்தத்திற்காவது அல்லது வேறு எவ்வகை பயன்களுக்காவது கட்டிடங்கள், கொட்டகைகள் முதலியன கட்டக் கூடாது.
5. நிலைய எல்லைக்குள் யோகா பயற்சி, மூச்சு பயிற்சி மற்றும் தியானம் தவிர பொது செயல்களுக்காவது வேறு எந்த செயலுக்காவது பயன்படுத்தக்கூடாது. மாநகாட்சியின் அனுமதி பெற்று நடத்தப்படுகின்ற கட்டண பயிற்சி வகுப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/- யை வாடகையாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும். மற்ற நாட்களில் மேற்படி யோகா மையத்தை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தலாம்.
6. நிலையத்திற்கு வெளியிலும், சுற்றிலும் சுற்றுபுறத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.
7. யோகா மைய எல்லைக்குள் சட்டம் ஒழுங்கு அமைதி நிலவ அனுமதி பெற்றவர் அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.
8. மத்திய மாநில அரசு துறைகளான வருமானவரித்துறை, கலால்வரித் துறை மற்றும் இதர துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின் படி சேவை வரி, இதர வரி கட்டணங்கள் மற்றும் மின்சார செலவினங்கள் அனைத்தும் அனுமதி பெற்றவர்கள் மற்றும் இலவசமாக பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தங்களுடைய செலவில் ஏற்றுக் கொள்ளவேண்டும்.
9. யோகா மையத்தில் அனுமதி பெற்று நடத்தப்படும் பயிற்சிகளின் விபரங்கள் பற்றிய அறிவிப்புப் பலகைகளை யோகா மையத்தில் முன்புறம் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.
10. யோகா மையத்தில் அனுமதி பெற்று நடத்தப்படும் பயிற்சிகள் மற்றும் இலவச வகுப்புகள் நடைபெறும் சமயத்தில் இழப்பு ஏதேனும் ஏற்படின், அதற்கு மாநகராட்சி எந்த விதத்திலும் பொறுப்பில்லை.

11. மாநகராட்சி விதிமுறைகளை மீறும் பட்சத்தில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ஓதுக்கீடு ரத்து செய்ய ஆணையருக்கு அதிகாரமுண்டு.
12. யோகா மையத்தில் நிறுத்தப்படும் வாகனங்களை வளாகத்திற்குள் நாட்கணக்கில் நிறுத்த அனுமதிக்கக் கூடாது.
13. பூங்கா மற்றும் யோகா மையத்தில் வாகனங்கள் உள்ளே அனுமதிக்கக் கூடாது.
14. யோகா மையத்தை அரசியல் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தகூடாது.
15. யோகா மையக் கட்டிடத்தில் எந்தவிதமான கட்டிட மாறுதல் பணி மேற்கொள்ளக்கூடாது,
16. யோகா மையத்தில் யோக பயிற்சி காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை மற்றும் மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதற்கு மேல் உபயோகப்படுத்த ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற வேண்டும்.
17. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 மற்றும் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் அச்சட்டங்களின் கீழ் செய்யப் பெற்றுள்ள வழிச்சட்டங்களின் விதிகள். திட்டங்கள் கணக்கு விதிகள் மற்றும் அரசாணைகள், மாநகராட்சி ஏற்படுத்தியுள்ள அல்லது அவ்வப்பொழுது இனி ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் சிறப்புக் கட்டுப்பாடுகள் யாவற்றிற்கும் இந்த அனுமதி உட்பட்டது.
18. யோகா மையத்தை எந்த நேரமும் ஆய்வு செய்ய ஆணையர் மற்றும் அவரது அங்கீகாரம் பெற்றவர்களுக்கு முழு அதிகாரமுண்டு.
19. யோகா மையத்தை மாநகராட்சிக்கு தேவைப்படும் போது உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.
20. யோகா மையத்தை அரசு கொள்கைக்கு எதிராக செயல்படுத்தகூடாது.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 102 நாள் 12.09.2011</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 39 நாள் 11.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்: 36**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண்.30-ல் காந்திபுரம் 3நெம்பர் வீதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தை பொது மக்கள் உயோகப்படுத்தும் வகையில் வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.30-ல் காந்திபுரம் 3 நெம்பர் வீதியில் புதியதாக சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளது. சமுதாய கூடத்தை விழா காலங்களில் பொதுமக்கள் உபயோகத்திற்கு பயன்படுத்தும் வகையில், உதவி பொறியாளர் பொதுப்பணித்துறை வழிகாட்டுதல் மதிப்பில் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.1,567/- என நிர்ணயம் செய்து குறிப்பளித்துள்ளார்.

மேற்படி சமுதாய கூடத்தை பொதுமக்கள் உபயோகப்படுத்த நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.1,600/- எனவும் அதற்கான வைப்புத்தொகை ரூ. 2,000/- எனவும் மத்திய மாநில அரசு துறைகளான வருமான வரித்துறை கலால் வரித்துறை மற்றும் இதர துறைகளால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்படி சேவை வரி, இதர வரி கட்டணம் மற்றும் மின்சார செலவினங்கள் செலுத்தும் நிபந்தனைகளின்படி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 11.08.2011-ம் தேதிய தீர்மான எண்.44-ல் மேற்படி சமுதாய கூடத்திற்கு தினசரி வாடகை ரூ.500/-எனவும், வைப்பு தொகை ரூ.1000/- எனவும் நிர்ணயித்து ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

ஆணையாளர் அவர்களின் குறிப்பின்படி துணை ஆணையாளர் மேற்படி சமுதாய கூடத்தை தலப்பார்வை செய்து நாள் ஒன்றுக்கு ரூ.1000/- நிர்ணயம் செய்யலாம எனவும் வர்த்தக பகுதி என்பதால் வைப்பு தொகை ரூ.2000/- நிர்ணயம் செய்யலாம் எனவும் குறிப்பு அளித்ததை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 06487/2011/அ8(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 103 நாள் 12.09.2011</u>**

தினசரி வாடகை ரூ. 700 மற்றும் வைப்புத்தொகை ரூ. 1200 என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 37

**பொருள்:** வழக்குகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி சொத்து வரி விதிப்பு தீர்ப்பாய உத்திரவுகள் மீது கோவை மாவட்ட நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்குகளில் வழக்கு கட்டணம் வழங்குதல் - தொடர்பாக.

*************

கோயம்புத்தூர் மாநகராட்சி சொத்து வரிவிதிப்பு தீர்ப்பாய உத்திரவுகளை எதிர்த்து, கோவை மாவட்ட நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பில் 240-க்கும் மேற்பட்ட வழக்குகளில் (நான்கு மண்டலம் சம்பந்தப்பட்ட) மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. இத்துடன் காலதாமதத்தை மன்னிக்கக் கோரும் காலதாமத மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்குகள் யாவும் வெவ்வேறு சொத்துக்களுக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்புகளை எதிர்த்து வெவ்வேறு மனுதாரர்களால் வெவ்வேறு காலகட்டத்தில் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்குகளாகும். இதன்மீது தீர்ப்பாய உத்திரவுகளும், மாநகராட்சி சார்பில் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகளும் வெவ்வேறு காலகட்டத்தில் செய்யப்பட்டவை. மேற்படி வழக்குள் யாவும் தனித்தனியான வழக்குகள் ஆகும்.

எனவே, மேற்படி மேல்முறையீடு தாக்கல் செய்த காலத்தில் பகுதி தொகையாக வழக்கிற்கு தலா ரூ. 1750/- மாநகராட்சி முன்னாள் வழக்கறிஞர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. தற்போது கடந்த 31.3.2011 அன்று மேற்படி வழக்குகளிலிருந்து 176 வழக்குகள் மாநகராட்சிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது.

மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 157, நாள் 29.12.2009-ன்படி மாநகராட்சியால் தாக்கல் செய்யப்படும் மாவட்ட நீதிமன்ற மேல் முறையீட்டு மனுக்களுக்கு தலா ரூ.3500/- வழக்கு கட்டணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்கனவே முன்னாள் வழக்கறிஞர்களுக்கு வழக்கிற்கு தலா ரூ.1750/-வீதம் வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி மேல் முறையீட்டு வழக்குகள் அனைத்தையும் தனிப்பட்ட வழக்குகளாக கருதி மீதம் ரூ. 1750/- வீதம் ஒவ்வொரு வழக்கிற்கும் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 767 /02 / சி 2(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 104 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 38

**பொருள் :** **பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு அனைத்து மாநகராட்சி வரிவசூலிப்போர் சங்கத்தின் துணைத் தலைவர்– உயர்நீதிமன்றம் உத்திரவு டபுள்யு. பி. என். 27554/2010 உத்திரவின்படி தகுதியுள்ள வரிவசூலர்களுக்கு வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பணியிடம் வழங்க அரசுக்கு பரிந்துரைப்பது – தொடர்பாக – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

*****

**தமிழ்நாடு வரிவசூலிப்போர் சங்கத்தால் தொடுக்கப்பட்ட வழக்கின் மீதான நீதிப்பேராணை எண்27554/2010ல் மேற்கண்ட நீதிப்பேராணை கிடைக்கப்பெற்ற 8 வாரங்களுக்குள் உரிய ஆணையை பிறப்பிக்குமாறு வழக்கின் முதல் எதிர்மனுதாரரான அரசுச்செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.**

இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.**7856/2011** மா.ந.அ**1**. நாள்.**6.04.2011**ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பதவி உயர்வுக்கு அரசாணை (நிலை) எண்.**140** நாள்:27.**05.1997**ல் வெளியிடப்பட்டுள்ள தெளிவுரைகளின்படி தகுதியுள்ள வரித்தண்டலர்களின் பட்டியலுடன் கருத்துரு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டிருந்தது. இவ்வலுவலக கடிதம் எண்.**5744/2009**/எம்சி**2** நாள்.**25.05.2011**ன்படி ஆணையரின் கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.**7656/2011**/மா.ந.அ**1** நாள்.**25.06.2011**ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பொருள் குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைத்து தீர்மானம் இயற்றி உடனடியாக மாமன்ற தீர்மானத்தை அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 20 ஆண்டுகள் வரிவசூலர் பணி முடிந்தவர்கள் அல்லது 50 வயது நிரம்பிய வரி வசூலர்களுக்கு அரசாணை எண்.140 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.05.1997ன்படி பதவி உயர்வு வழங்க தோற்றுவிக்கப்பட்ட வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பணியிடத்தில் ஏற்கனவே பணியமர்வு செய்யப்பட்ட 15 வரி வசூலர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டனர்.

கோயம்புத்தூர், நகராட்சியாக இருந்தபோது நகராட்சி கடைகள் வாடகை மற்றும் ஆண்டு குத்தகை இனம், வழக்குகள் இனம், விளம்பரக் கட்டணம், கேபிள் வரி, ஆகியன சந்தை கண்காணிப்பாளரால் கண்காணிக்கப்பட்டு வந்தது. அதன்பிறகு புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாநகராட்சி பணிவிதிகளில் சந்தை க ண்காணிப்பாளர் பணியிடம் இடம் பெறவில்லை.

சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி ஆகிய வசூல் பணிகளில் இது தொடர்பாக நீதிமன்றத்தில் ஏற்படும் வழக்குகள் பற்றிய நடவடிக்கைகள் யாவும் வரிவசூலர்களால் கவனிக்க இயலாததாக உள்ளது. மேற்படி பணிகளை கண்காணித்து மாநகராட்சியின் வருமானத்தை பெருக்கவும், வழக்கு இனங்களை கவனிக்கவும் வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் உயர்நீதிமன்ற பேராணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிவசூலர்களான கீழ்கண்ட வரிவசூலர்களின் பணிவிபரங்கள்:-

| வ. எண் | பெயர் | வரிவசூலர்களாக பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.ரங்கராஜ் | 20.03.1978 | சுயவிருப்ப ஓய்வில் சென்றுவிட்டார். |
| 2 | திரு. பி.ஜெயச்சந்திரன் | 31.03.1984 | 20 ஆண்டு பணிபூர்த்தி செய்துள்ளார். |
| 3 | திரு.ஏ.விஜயன் | 01.04.1984 | 20 ஆண்டு பணிபூர்த்தி செய்துள்ளார். |
| 4 | திரு. கே. கனகராஜ் | 09.04.1984 | 20 ஆண்டு பணிபூர்த்தி செய்துள்ளார். |
| 5 | திரு.எஸ். கருணாகரன் | 17.05.1984 | 20 ஆண்டு பணிபூர்த்தி செய்துள்ளார். |
| 6 | திரு.பி.மணிகண்டன் | 14.10.1985 | 20 ஆண்டு பணிபூர்த்தி செய்துள்ளார். |
| 7 | திரு. ஆர். ஜெயக்குமார் | 23.10.1992 | 23.10.2012ல்தான் 20 ஆண்டு பூர்த்தியாகிறது |
| 8 | திரு. அபுதாகீர் | 21.10.1992 | 20.10.2012ல்தான் 20 ஆண்டு பூர்த்தியாகிறது |
| 9 | திருமதி. டி.சுமதி | 03.05.1993 | 02.05.2013ல்தான் 20 ஆண்டு பூர்த்தியாகிறது. |

திரு.பி.ஜெயச்சந்திரன், திரு.ஏ.விஜயன், திரு.கே.கனகராஜ், மற்றும் திரு.எஸ்.கருணாகரன், திரு.பி.மணிகண்டன் ஆகிய ஐந்து வரிவசூலர்கள் மட்டுமே 20 ஆண்டுகள் வரிவசூல் பணியை பூர்த்திசெய்து, வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பணியிடத்திற்கான பதவி உயர்விற்கு தகுதிபெற்றுள்ளனர். திரு.ஆர்.ஜெயக்குமார் 23.10.2012லும், திரு.அபுதாகிர் 20.10.2012லும் மற்றும் திருமதி.டி.சுமதி 02.05.2013லும் வரிவசூலர் பணியிடத்தில் 20 ஆண்டுகளை பூர்த்தி செய்கின்றனர்.

எனவே, 20 ஆண்டுகளுக்கு மேல் வரிவசூலர் பணியில் இருக்கும் திரு.பி.ஜெயச்சந்திரன், திரு.ஏ.விஜயன், திரு.கே.கனகராஜ், திரு.எஸ்.கருணாகரன் மற்றும் திரு.பி.மணிகண்டன் ஆகிய ஐந்து வரிவசூலர்களை, பணிமூப்பின் அடிப்படையில் அரசாணை எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.27.05.1997ன்படி வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பதவி உயர்வு அளித்து, அவர்கள் ஓய்வு பெறும்வரை இப்பணியிடத்தை தொடர அரசுக்கு பரிந்துரைக்கலாம். மேலும் திரு.ஆர்.ஜெயக்குமார், திரு.அபுதாகிர் மற்றும் திருமதி.டி.சுமதி ஆகிய மூவருக்கும் 20 ஆண்டுகள் பணிமுடித்த பிறகு வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) பணியிடம் வழங்கவும் அரசுக்கு பரிந்துரைக்க நியமனக்குழு தீர்மான எண்.128/நாள்.05.09.2011ன்படி ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்கண்ட பொருள் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** அனுமதிக்கலாம் ந.க.எண். 5744/2009/எம்சி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 105 நாள் 12.09.2011</u>**

1. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

2.. வரிசை எண். 7, 8 மற்றும் 9ல் உள்ள வரிவசூலர்கள் திரு ஆர். ஜெயக்குமார், திரு அபுதாகிர் மற்றும் திருமதி டி. சுமதி ஆகியோர் கடந்த 19 ஆண்டுகளாக இம்மாநகராட்சியில் வரிவசூலர்களாக பணிபுரிந்து வருகின்றனர். மாநகராட்சி பணி விதிகளின்படி வரிவசூலர் பதவியிலிருந்து வேறு பதவிக்கு பதவி உயர்வு பெற வழிவகை இல்லாத காரணத்தினால், வரிசை எண். 7, 8 மற்றும் 9ல் உள்ள வரிவசூலர்களுக்கு 19 ஆண்டுகள் மட்டும் பணிபுரிந்திருந்தாலும், சிறப்பினமாகக் கருதி சிறப்பு வரி ஆய்வர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 39**

மத்திய அரசின் கோயம்புத்துார் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்துார் மாநகராட்சியால் ரூ.377.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை(3ப) எண்.25 ந.நி.கு.வ(ந.நி3) துறை நாள்:24.10.2007-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு திட்டப்பணிகள் ஆறு (6) சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் சிப்பம் 6–வது பணியான ஒண்டிபுதுார், சிங்காநல்லுார் கிராமப்பகுதியில் 60 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கான நிலம் மாநகராட்சி வசம் இல்லாததால் தனியார் நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்பேரில் ஒண்டிபுதுார் சிங்காநல்லுார் கிராம பகுதியில் தனியாருக்கு சொந்தமானதும் புல எண்கள் 758/1(பாகம்), 758/2(பாகம்), 761/3ஏ, 761/3பி, 761/3சி, 761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5-க்கு சம்பந்தப்பட்ட 14.40 ஏக்கர் நிலத்தினை தேர்வு செய்து கையகப்படுத்தி நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதற்கான முன்மொழிவுகள் மாமன்றத் தீர்மான எண்.253, நாள்:21.01.2008 ஒப்புதலுடன் கோவை மாவட்ட ஆட்சி தலைவர் மூலம் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கடந்த 26.07.2008-ல் கடிதம் அனுப்பப்பட்டதில் மாநகராட்சி கையகப்படுத்தப்பட வேண்டிய 14.40 ஏக்கர் நிலத்தில் புல எண்.762/4–ஐ தவிர மற்ற அனைத்து நிலங்களும் புஞ்சை நிலங்கள் எனவும், புல எண்.762/4–ல் உள்ள 0.05 ஏக்கர் நிலம் "அரசு இட்டேரி புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்டு, கையகப்படுத்துவதற்கான செலவின தொகை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளரால் நில எடுப்பு சட்டம், 1894 அவசர பிரிவு 17(2)-ன் படி கையகப்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது.

| | |
|---|---|
| வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிலத்தின் தோராய மதிப்பு | 12,65,73,500/- |
| கட்டிடம் மற்றும் மரத்தின் மதிப்பு | 35,150/- |
| மொத்தம் | 12,66,08,650/- |
| 30% ஆறுதல் தொகை | 3,79,82,595/- |
| 14.5% நிர்வாக செலவுத்தொகை | 1,83,58,254/- |
| விளம்பரத்தொகை | 25,000/- |
| மொத்தம் | 18,29,74,499/- அல்லது 18,29,74,500/- |

ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்திற்கென அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ.377.13 கோடியில், நிலம் கையகப்படுத்துவதற்கான தொகை அடங்கவில்லை என்பதால், இச்செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியும் நிலத்தினை கையகப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியும் தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை(நிலை) எண்.236, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.01.12.2008-ல் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நில மதிப்பு தொகை, அப்பகுதியில் நிலவிவரும் வெளிச்சந்தை விலையோடு ஒப்பீடு செய்கையில் மிகவும் அதிகமாக இருப்பதாக கருதி மீண்டும் விலை நிர்ணயம் குறித்த அனைத்து ஆய்வுகளையும் விதிமுறைகளின் படி பின்பற்ற மாமன்றம் தனது தீர்மானம் எண்.309, நாள்:24.12.2008-ல் தீர்மானிக்கப்பட்டது.

அரசாணையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள இடத்தினை மாநில தொழில் நுட்ப ஆலோசனை குழு நேராய்வு செய்து தேர்வு செய்து சிங்காநல்லுார் கிராமம் சர்வே எண்.758/1(பாகம்), 758/2(பாகம்), 761/3ஏ, 761/3பி, 761/3சி, 761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5 உள்ளடங்கிய 14.40 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் தகுதியான இடமாக தெரிவித்தும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் குறிப்பிட்டுள்ள தகுதிக்கு பொருத்தமாக உள்ளதாலும், அவ்விடத்தினை தேர்வு செய்யலாமென கருத்து தெரிவித்ததால், மேற்படி இடத்தினை அவசர பிரிவு 17(2)-ன் படி மாநகராட்சி கையகப்படுத்தவும், அதற்கான கிரயத்தொகையை மாநகராட்சி பொது நிதியில் செலவழித்து வாங்கவும் மாமன்றம் தனது தீர்மானம் எண்.77, நாள்:30.09.2009-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் மேற்படி நிலத்தினை நில எடுப்புச்சட்டம், 1894, அவசரப்பிரிவு 17(2) ன் கீழ் கையகப்படுத்த காலதாமதம் ஏற்படும் என்பதால் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுடன் மாவட்ட நிர்வாகம் மூலமாக நேரடியாக அமர்வு பேச்சுவார்த்தை(Private Negotiation) மூலமாக நிலத்தினுடைய மதிப்பினை நிர்ணயித்து அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் பேரில் சிங்காநல்லூர் கிராமம் சர்வே புல எண்.758/1(பாகம்), 758/2(பாகம்), 761/3ஏ,761/3பி, 761/3சி, 761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5-க்கு சம்பந்தப்பட்ட 14.34 ஏக்கர் பரப்பளவுள்ள தனியார் நிலத்தினை நிலமதிப்பு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.88 லட்சம் விகிதத்தில் ரூ.12,61,92,000(ரூபாய் பனிரெண்டு கோடியே அறுபத்தொரு லட்சத்து தொன்னூற்று இரண்டாயிரம் மட்டும்) மதிப்பில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான நில மதிப்பு பதிவுக்கட்டணம் (Registration Charges for Land Value) மற்றும் எதிர்பாராத செலவினம், நிர்வாக செலவினங்களுக்கும் சேர்த்து நிர்ணயிக்கப்பட்ட மொத்த மதிப்பான ரூ.15.00 கோடி (ரூபாய் பதினைந்து கோடி) செலவில் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வாங்கிக்கொள்ள, திருத்திய நிர்வாக அனுமதி அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.II) நாள்:26.08.2011-ல் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் , பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேற்படி 14.34 ஏக்கர் பரப்பளவுள்ள தனியார் நிலத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கவும், புல எண் 762/4–ல் உள்ள 0.05 ஏக்கர்அரசு இட்டேரி புறம்போக்கு நிலத்தினை மாநகராட்சிக்கு பராதீனம் செய்ய அரசினை கேட்டுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அ) அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந. II) நாள்: 26.08.2011–ஐ மாமன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) கோவை தெற்கு வட்டம், சிங்காநல்லூர் கிராமம் புல எண்கள், 758/1 (பாகம்), 758/2 (பாகம்), 761/3ஏ,761/3பி, 761/3சி,761/3டி, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5–க்கு சம்பந்தப்பட்ட உள்ள 14.40 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினைவாங்குவதற்கும் மற்றும் நிலமதிப்பு பதிவு கட்டணம், எதிர்பாராத செலவினம் மற்றும் நிர்வாக செலவினம் சேர்த்து அரசாணையில் குறிப்பிட்டுள்ள செலவுத்தொகை ரூ. 15.00 கோடி (ரூபாய் பதினைந்து கோடி) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். இதில் 3.71 ஏக்கர் பட்டா நிலத்திற்கான புல எண் 762/2 அரசாணையில் விடுபட்டு உள்ளதால், இப்புல எண்களை உள்ளடக்கி மொத்த பரப்பளவு 14.34 ஏக்கர் நிலத்தினை பெற உரிய திருத்தம் செய்வதற்கு அரசினை கேட்டுக்கொள்ளலாம்.

இ) அரசாணையில் 60 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது குறித்து தவறுதலாக 80 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் என்று குறிப்பிட்டுள்ளதை திருத்தம் செய்ய அரசினை கேட்டுக்கொள்ளலாம்.

ஈ) புல எண் 762.4–ல் உள்ள 0,05 ஏக்கர் அரசு இட்டேரி புறம்போக்கு நிலத்தினை மாநகராட்சிக்கு பராதீனம் செய்ய அரசினை கேட்டுக்கொள்ளவும் தனி நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 12069/06/MH5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 106 நாள் 12.09.2011**

1. அரசாணை (ப) எண். 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா. ந. II) நாள் 26.08.2011 பதிவு செய்யப்பட்டது.
2. அலுவலகக் குறிப்பு ஆ, இ, ஈ அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.
3. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு கையகப்படுத்தப்படவுள்ள நிலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை, சந்தை விலைக்கு கூடுதலாக இருப்பதால் விலையைக் குறைத்து நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சியரைக் கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 40

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறப்பு சாலை திட்டம் 2011 -12ன் கீழ் பழுதடைந்துள்ள சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு - நிர்வாக அனுமதி வழங்குதல் - தொடர்பாக |

**********

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை குழாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சாலைகளில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றவுடன் சாலைகளை புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், நகரில் உள்ள பழுதடைந்துள்ள ஏனைய பிரதான சாலைகளை புதுப்பிக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

| வ. எண் | வார்டு எண். | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1 | புராணி கார்டன் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.720 | 38.70 |
| 2. | 65 | சபரி கார்டன், சூர்யா லேஅவுட், ராமசாமி நகர்-II மற்றும் பாரதி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 2.959 | 63.70 |
| 3. | 69 | ஜி.பி.எம் நகர் மற்றும் பூம்புகார் நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.539 | 48.10 |
| 4. | 70 | தரணி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.395 | 33.20 |
| 5. | 72 | காவலர் குடியிருப்பு பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 2.267 | 56.00 |
| 6. | 72 | வ.உ.சி நகர், ருத்திரப்பன் வீதி மற்றும் ஸ்ரீவாரி கார்டன் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 3.415 | 62.70 |
| 7. | 31 | காந்திபுரம் வீதி எண்.10 & 11 பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.954 | 50.50 |
| 8. | 30 | ஆம்னி பேருந்து நிலையத்தில் தார் தளம் புதுப்பித்தல் | 0.09 | 24.50 |
| 9. | 12 | பூங்கா நகர் மற்றும் ராஜிவ் நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.105 | 36.50 |
| 10. | 27 | ரங்க கோனார் வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.585 | 31.00 |
| 11. | 27 | செல்லப்ப கவுண்டர் வீதி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.325 | 13.75 |
| 12. | 28 | ராஜாஜி சாலை,ராஜரத்தினம் வீதி, வி.ஜி. லேஅவுட் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 0.965 | 35.50 |
| 13. | 28 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மற்றும் நகரப் பேருந்து நிலையத்தில் தார்தளம் புதுப்பித்தல் | 0.901 | 37.50 |
| 14. | 42 | லாலா தோட்டம், அய்யப்பா நகர், சுப்பையா லே அவுட் மற்றும் அபிராமி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.141 | 33.75 |
| 15. | 54 | அல்அமீன் காலனி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.380 | 45.50 |
| 16. | 54 | அம்முலு நகர் மற்றும் கபூர் லேஅவுட், ரோஸ் கார்டன பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.817 | 73.25 |

| வ. எண் | வார்டு எண். | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 17. | 6 | டெக்ஸ்டூல் லே அவுடமற்றும் விவேகானந்தா நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.50 | 30.10 |
| 18. | 10 | ஜி.வி.ரெசிடென்சி குறுக்கு சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.85 | 71.00 |
| 19. | 14 | ராஜீவ்காந்தி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 2.70 | 60.00 |
| 20. | 14 | மீனா எஸ்டேட் மற்றும் நேவி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.35 | 28.30 |
| 21. | 26 | பந்தயசாலை, அப்புசாமி லேஅவுட் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 3.02 | 74.00 |
| 22. | 26 | ரெட்பீல்டு சாலையில் தெரசா பள்ளி மேற்கு முதல் காமராஜர் சாலை சந்திப்பு மற்றும் ஜி.கே.டி. வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.03 | 60.00 |
| 23. | 10 | ஜி.வி.ரெசிடென்சி பிரதான சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 2.08 | 72.00 |

| வ. எண் | வார்டு எண். | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 24. | 55 | தெலுங்குபாளையம் சுப்ரமணிய உடையார் வீதி பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.665 | 70.00 |
| 25. | 55 | பிரியா நகர் மற்றும் டெக்ஸ்டைல் காலனியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.767 | 58.50 |
| 26. | 55 | தெலுங்குபாளையம் சாஸ்தா நகர், ஜெயராம் நகர், ராஜீவ் காந்தி நகர் மற்றும் சரோஜினி நகர் 1 முதல் 4 வரையுள்ள சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.983 | 55.48 |
| 27. | 58 | சுகர்கேன் பிரதான சாலை பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 1.23 | 60.00 |
| 28. | 59 | ஐஸ்வர்யா நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 0.332 | 9.62 |
| 29. | 60 | கட்டபொம்மன் வீதி பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 0.345 | 5.50 |
| 30. | 61 | புவனேஸ்வரி நகர் பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 0.332 | 8.90 |
| 31. | 63 | மணியம் வேலப்பர் வீதி, கிருஷ்ணா நகர், வைகை வீதி, காவேரி நகர் மற்றும் காமராஜர் சாலை குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 2.102 | 71.70 |
| 32. | 62 | சுப்பையா வீதி, ஜீ.கே.சுந்தரம் வீதி, வேலப்பர் குறுக்கு வீதி மற்றும் குப்புசாமி வீதி, காளியப்பன் வீதி, காளியண்ணன் வீதி மற்றும் லட்சுமணன் வீதி, கானாக்காள் வீதி, மாயக்காள் வீதி, சின்னப்பன் வீதி மற்றும் காளியம்மன் கோவில் வீதி தார்தளம் புதுப்பித்தல் | 2.387 | 68.50 |
| 33. | 62 | கே.ஜி.லே அவுட் வெஙகடாசலம் வீதி மற்றும் ரமணி வீதி பகுதிகளில் தார் தளம் புதுப்பித்தல். | 1.272 | 36.30 |
| | | மொத்தம் | 49.503 | 1524.05 |
| | | | | |

எனவே மேற்படி பட்டியலில் கண்டுள்ள சாலைகளை புதுப்பிக்க இரண்டாம் கட்டமாக ரூ.1524.05 இலட்சத்திற்கு சிறப்பு சாலை திட்டம் 2011-2012ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை கோரவும், மாமன்றத்தின் பரிந்துரைக்கும் மேலும் மேற்படி பணிகளில் அரசு நிதி ஒதுக்கீடு போக மீதம் உள்ள பணிகளுக்கு மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 8230/2010/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 107 நாள் 12.09.2011**

பொருளில் வரிசை எண் 18ல் உள்ள பணி நீங்கலாக பிற பணிகளுக்கு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண் 18 பணிக்குப் பதிலாக வார்டு எண் 59, 60, மற்றும் 61ல் பாதாள சாக்கடைப் பணி முடிவுற்ற பகுதிகளில் இப்பணியினை மேற்கொள்ள அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 41

கோயம்புத்தூர் மாநகராட்சியின் **கிழக்கு** மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள **மழைநீர் வடிகால்**களினை சுத்தம் செய்யும் பணிக்கு **88 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை** ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணியினை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:131, நாள்: 10-02-2011-ன் படி தி/ள் எம்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை நிறுவனத்தார் மூலம் கடந்த 01-04-2011 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தகாலம் வரும் 30-09-2011-ல் முடிவடையவுள்ளது.

வரும் 01-10-2011 முதல் 31-03-2012 வரையிலான காலத்திற்கு கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு 88 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.36,00,000/- க்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்:55, நாள்: 08-09-2011-ல் (ந.க.எண்:6689/2011/(எம்.இ.3) எம்.டி.3) நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கூறிய பணிக்கு புதிய ஒப்பந்தபுள்ளிகள் கொரப்பட்டு அவற்றினை இறுதி செய்து புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் இல்லாததால் தற்பொழுது கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் இப்பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் தி/ள் எம்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை நிறுவனத்தாரின் 30-09-2011-ல் முடிவடையவுள்ள ஒப்பந்தகாலத்தினை புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000 அத்தியாயம் (4) வரிசை எண் 14 விதி எண் 9 ல் குறிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின் படி ஒப்பந்தகால நீட்டிப்பு செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:1160/2011/(எம்.இ.3) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 108 நாள் 12.09.2011</u>**

பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 42

கோயம்புத்தூர் மாநகராட்சியின் **வடக்கு** மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள **மழைநீர் வடிகால்**களினை சுத்தம் செய்யும் பணிக்கு **124 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை** ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணியினை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:130, நாள்: 10-02-2011-ன்படி தி/ள் எம்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை நிறுவனத்தார் மூலம் கடந்த 01-04-2011 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தகாலம் வரும் 30-09-2011-ல் முடிவடையவுள்ளது.

வரும் 01-10-2011 முதல் 31-03-2012 வரையிலான காலத்திற்கு வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு 120 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49,00,000/- க்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்:56, நாள்: 08-09-2011-ல் (ந.க.எண்:6688/2011/(எம்.இ.3) எம்.டி.3) நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கூறிய பணிக்கு புதிய ஒப்பந்தபுள்ளிகள் கொரப்பட்டு அவற்றினை இறுதி செய்து புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் இல்லாததால் தற்பொழுது கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் இப்பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் தி/ள் எம்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை நிறுவனத்தாரின் 30-09-2011-ல் முடிவடையவுள்ள ஒப்பந்தகாலத்தினை புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000 அத்தியாயம் (4) வரிசை எண் 14 விதி எண் 9 ல் குறிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின் படி ஒப்பந்தகால நீட்டிப்பு செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:1158/2011/(எம்.இ.3) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 109 நாள் 12.09.2011</u>**

பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 43

கோயம்புத்தூர் மாநகராட்சியின் **மேற்கு** மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள **மழைநீர் வடிகால்**களினை சுத்தம் செய்யும் பணிக்கு **130 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்**களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணியினை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:128, நாள்: 10-02-2011-ன் படி திரு. ஆர். மயில்வானன் ஒப்பந்ததாரர் மூலம் கடந்த 01-04-2011 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தகாலம் வரும் 30-09-2011-ல் முடிவடையவுள்ளது.

வரும் 01-10-2011 முதல் 31-03-2012 வரையிலான காலத்திற்கு மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு 120 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.49,00,000/- க்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்:54, நாள்: 08-09-2011-ல் (ந.க.எண்:6690/2011/(எம்.இ.3) எம்.டி.3) நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கூறிய பணிக்கு புதிய ஒப்பந்தபுள்ளிகள் கொரப்பட்டு அவற்றினை இறுதி செய்து புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் இல்லாததால் தற்பொழுது கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் இப்பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் திரு. ஆர். மயில்வானன் ஒப்பந்ததாரரின் 30-09-2011-ல் முடிவடையவுள்ள ஒப்பந்தகாலத்தினை புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000 அத்தியாயம் (4) வரிசை எண் 14 விதி எண் 9 ல் குறிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின் படி ஒப்பந்தகால நீட்டிப்பு செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:1157/2011/(எம்.இ.3) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 110 நாள் 12.09.2011</u>**

பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 44

கோயம்புத்தூர் மாநகராட்சியின் **தெற்கு** மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள **மழைநீர் வடிகால்**களினை சுத்தம் செய்யும் பணிக்கு **80 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்**களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணியினை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்:129, நாள்: 10-02-2011-ன் படி தி/ள் கே.சி.பி. இஞ்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ், கோவை நிறுவனத்தார் மூலம் கடந்த 01-04-2011 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தகாலம் வரும் 30-09-2011-ல் முடிவடையவுள்ளது.

வரும் 01-10-2011 முதல் 31-03-2012 வரையிலான காலத்திற்கு தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு 80 எண்ணிக்கைகள் துப்புரவு பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.33,00,000/- க்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்:53, நாள்: 08-09-2011-ல் (ந.க.எண்:6687/2011/(எம்.இ.3) எம்.டி.3) நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

மேற்கூறிய பணிக்கு புதிய ஒப்பந்தபுள்ளிகள் கொரப்பட்டு அவற்றினை இறுதி செய்து புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை துவங்க கால அவகாசம் இல்லாததால் தற்பொழுது கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் இப்பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் தி/ள் கே.சி.பி. இஞ்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ், கோவை நிறுவனத்தாரரின் 30-09-2011-ல் முடிவடையவுள்ள ஒப்பந்தகாலத்தினை புதிய ஒப்பந்ததாரரை தேர்வு செய்து ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும் வரை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000 அத்தியாயம் (4) வரிசை எண் 14 விதி எண் 9 ல் குறிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி ஏற்கனவே உள்ள ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஒப்பந்தகால நீட்டிப்பு செய்து ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:1159/2011/(எம்.இ.3) எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 111 நாள் 12.09.2011</u>**

பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 45

| | |
|---|---|
| பார்வை : | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.51 நாள்.08.09.2011. |

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 27 ஆடிஸ் வீதியில் அமைந்துள்ள சத்துணவு மையம் காலியாக உள்ளது. (கட்டிட அளவு 592/ச.அடி) இதனை கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் நியாய விலைக் கடை 59-க்கு வாடகைக்கு கட்டிடம் கோரி மாவட்ட வழங்கல் அலுவலர் தனது 27.06.2011-ம் தேதிய கடித்தில் கேட்டுள்ளார். உதவி பொறியாளர் மேற்படி கட்டிடத்திற்கு பொதுப் பணித்துறை கணக்கீட்டின் படி மாத வாடகை ரூ.7442/- நிர்ணயம் செய்துள்ளார். இதன் படி கட்டிடத்தினை கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் நியாய விலைக் கடைக்கு மாத வாடகை ரூ.7442/- நிர்ணயம் செய்து கடை ஒதுக்கீடு செய்ய பார்வையில் கண்டவாறு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதி அளித்துள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து அனுமதி வழங்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> அனுமதிக்கலாம் ந.க.எண்.6052 /11 / அ1 (தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 112 நாள் 12.09.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 46 –( திருத்தப்பட்டது)

| | |
|---|---|
| பார்வை: | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.50 நாள்.08.09.2011. |

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி.பூங்கா, டாக்டர் நஞ்சப்பா ரோடு மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.3000/- வாடகையாக வசூலிக்கலாம் என மாமன்ற தீர்மான எண்.487 நாள்.24.02.1999 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் அடிப்படையில் நாளது வரை மேற்படி மைதானத்திற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு நீண்டகாலமாகி விட்டதால் இம் மைதானத்திற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயர்வு செய்யலாம்.

| வ.எண். | நிகழ்ச்சி | தற்போதைய வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | அரசியல் பொதுக்கூட்டம் | ரூ.3000/- | ரூ.5000/- |
| 2. | தனியார் பொருட்காட்சி மற்றும் வியாபாரம் | ரூ.3000/- | ரூ.7500/- |
| 3. | மத சம்பந்தமான நிகழ்ச்சிகள் | ரூ.3000/- | ரூ.5000/- |
| 4. | சர்க்கஸ் | ரூ.3000/- | ரூ.3000/- |
| 5. | இரண்டு மற்றும் நான்கு சக்கர விற்பனை & மேளா | ரூ.3000/- | ரூ.6000/- |
| 6. | இசை இரவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் | ரூ.3000/- | ரூ.7500/- |
| 7. | கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளுக்கு | ரூ.3000/- | ரூ.5000/- |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயர்வு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மானம் எண் 50 நாள் 08.09.2011-ல் கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ.எண். | நிகழ்ச்சி | தற்போதைய வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | அரசியல் பொதுக்கூட்டம் | ரூ.3000/- | ரூ.5000/- |
| 2. | தனியார் பொருட்காட்சி மற்றும் வியாபாரம் | ரூ.3000/- | ரூ.10000/- |
| 3. | மத சம்பந்தமான நிகழ்ச்சிகள் | ரூ.3000/- | ரூ.7500/- |
| 4. | சர்க்கஸ் | ரூ.3000/- | ரூ.3000/- |
| 5. | இரண்டு மற்றும் நான்கு சக்கர விற்பனை & மேளா | ரூ.3000/- | ரூ.7500/- |
| 6. | இசை இரவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் | ரூ.3000/- | ரூ.5000/- |
| 7. | கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளுக்கு | ரூ.3000/- | ரூ.5000/- |
| 8. | கூட்டுறவுத்துறை, காதிகிராப்ட், கோஆப்டெக்ஸ மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் | ரூ.2000/- | ரூ.3000/- |

எனவே மேற்காண் பொருள் குறித்து அனுமதி வழங்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9659 /11 / அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 113 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 50 நாள் 08.09.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

புத்தகத் திருவிழாவிற்கு தினசரி வாடகையாக ரூ.1000 என நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 47**

| | |
|---|---|
| பார்வை : | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.52 நாள்.08.09.2011. |

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி.பூங்கா நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை ஆண்டொன்றுக்கு ரூ.35,01,000/- என்ற அடிப்படையில் 2010-2013-ம் ஆண்டு வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு திரு.A.சிவக்குமார் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது மேற்படியார் 2011-2012-ம் ஆண்டுக்கு மேற்படி இனத்திற்கான உரிமத்தொகை செலுத்தப்படாத காரணத்தாலும் அச்சமயத்தில் சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்த காரணத்தாலும் மறு ஏலம் நடத்துவதற்கு கால அவகாசம் இல்லாததால் மேற்படி உரிமத்தொகையில் 5% கூடுதல் செய்து இவ்வினத்தை முந்தைய குத்தகைதாருக்கு 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது.

மேற்படி இனத்திற்கு கடந்த 23.06.2011-ல் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அரசு மதிப்பான ரூ.36,76,000/- ஐ காட்டிலும் குறைவாக ஏலம் கோரப்பட்டதால் மறு ஏலம் கோரப்பட்டது. இவ்வினத்திற்கு 25.08.2011-ம் தேதியில் நடைபெறவிருந்த மறு ஏலம் நிர்வாக காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் தற்பொழுது உள்ளாட்சி தேர்தல் நடைபெறுவதற்கான அறிவிப்புகள் வெளியாகி உள்ளதாலும் மேற்படி இனத்திற்கு மறு ஏலம் நடத்துவதற்கு நாளிதழில் விளம்பரம் செய்தும் மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்படை செய்வதற்கான கால அவகாசம் இல்லாத காரணத்தாலும் மேற்படி இனத்தினை தேர்தல் தொடர்பான நடத்தை விதி முறைகள் முடிவடையும் காலம் வரை தற்பொழுது நடத்திவரும் குத்தகைதாரருக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்குவதற்கு பார்வையில் கண்டவாறு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதி அளித்துள்ளது. எனவே மேற்காண் பொருள் குறித்து அனுமதி வழங்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9659 /11 / அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 114 நாள் 12.09.2011**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 52 நாள் 08.09.2011 ஐ ஏற்று காலநீட்டிப்பு வழங்கப்பட்டமைக்கும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் முறையில் ஒப்படை செய்யும் காலம்வரை கால நீட்டிப்பு வழங்கவும் அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் 48**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு- வார்டு எண் 11-ல் உள்ள கமலா மில் குட்டை பகுதியில் தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சமுதாயக்கூடம் 663 ச.அ. பரப்பளவில் கான்கிரீட் கூரை கட்டிடம் நிறைவு பெற்று மின் சாதன உபகரணங்கள் பொருத்தி மின் இணைப்பு பெறப்பட்டு மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்குஉபயோகிக்கப்படும் நிலையில் உள்ளது – வாடகைக்கு விடுதல்- குறித்து. |

கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு, வார்டு எண்.11ல் உள்ள கமலா மில் குட்டை பகுதியில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம் 663 சதுர அடிக்கு தினசரி வாடகை ரூ. 185 நிர்ணயம் செய்து மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகிக்கப்படும் நிலையில் உள்ளது.

மேற்படி கட்டிடப் பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விதிகளின்படி (2011-2012) தினசரி வாடகை ரூ. 185 என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி வாடகையை நிர்ணயம் செய்யவும், இப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு கட்டிடம் பயனடைய அனுமதி வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 49 நாள் 08.09.2011ல் ஒப்புதல் பெறப்பட்டதைத் தொடர்ந்து மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். **08198**/ 2011/ED2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 115 நாள் 12.09.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் 49**

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு- வார்டு எண் 4-ல் உள்ள டாக்டர் ஜெகநாதன் நகர் பகுதியில் தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சமுதாயக்கூடம் 1309 ச.அ. பரப்பளவில் கான்கிரீட் கூரை கட்டிடம் நிறைவு பெற்று மின் சாதன உபகரணங்கள் பொருத்தி மின் இணைப்பு பெறப்பட்டு மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகிக்கப்படும் நிலையில் உள்ளது – வாடகைக்கு விடுதல் குறித்து. |

கோயமுத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு, வார்டு எண்.4ல் உள்ள **Dr. ஜெகநாதன் நகர்** பகுதியில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம் 1309 சதுர அடிக்கு தினசரி வாடகை ரூ. 960 நிர்ணயம் செய்து மேற்படி பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகிக்கப்படும் நிலையில் உள்ளது.

மேற்படி கட்டிடப் பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு வேண்டி வாடகை நிர்ணயம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விதிகளின்படி (2011-2012) தினசரி வாடகை ரூ. 960 என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி வாடகையை நிர்ணயம் செய்யவும், இப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு கட்டிடம் பயனடைய அனுமதி வேண்டியும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 48 நாள் 08.09.2011ல் ஒப்புதல் பெறப்பட்டதைத் தொடர்ந்து மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 08197 / 2011/ED2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 116 நாள் 12.09.2011**

தினசரி வாடகை ரூ. 750 என நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 50

| பொருள் | பணியமைப்பு - கோயம்புத்தூா் மாநகராட்சி – திரு. சி. ரொசாரியோ அமலதாஸ், இளநிலை உதவியாளா் மற்றும் தட்டச்சா் - ஈரோடு மாநகராட்சியிலிருந்து கோயம்புத்தூா் மாநகராட்சி ஒருவழி மாறுதல் கோருதல் - மாமன்ற ஒப்புதல் பெறதல் - தொடா்பாக |
|---|---|

ஈரோடு மாநகராட்சியில் இளநிலை உதவியாளா் உடன் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும் திரு சி. ரொசாரியோ அமலதாஸ் அவா்கள், தன்னை ஒருவழி மாறுதலில் கோயம்புத்தூா் மாநகராட்சியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளா் உடன் தட்டச்சா் பணியிடத்திற்கு பணிமாறுதல் செய்யுமாறு நகராட்சி நிா்வாக ஆணையருக்கு விண்ணப்பம் அளித்துள்ளாா். மேலும் அவரது மனைவி கோயம்புத்தூா் விமானப்படை அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அவரது தாய், தந்தை, திருமணமாகாத சகோதரி ஆகியோா் கோயம்புத்தூாில் வசித்து வருவதாகவும், அன்னாரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு, கோயம்புத்தூா் மாநகராட்சியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளா் உடன் தட்டச்சா் பணியிடத்தில் பணிமாறுதல் வழங்கக் கோரியுள்ளாா்.

மேற்காண் பொருள் குறித்து உரிய மாமன்ற தீா்மானம் பெற்று அனுப்பி வைக்கும்படி நகராட்சி நிா்வாக ஆணையா் தமது ந.க.எண் 34081/2011/ மா.ந. அ1, நாள் 26.08.2011 ம் தேதி கடிதத்தில் ஆணையரைக் கேட்டுக் கொண்டுள்ளாா்.

தற்போது கோயம்புத்தூா் மாநகராட்சியில் இளநிலை உதவியாளா் உடன் தட்டச்சா் பணியிடம் 9 (ஒன்பது) காலியாக உள்ளதால், மேற்கண்ட திரு. சி. ரொசாரியோ அமலதாஸ் அவா்களின் குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு அவரை ஈரோடு மாநகராட்சியிலிருந்து கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு ஒருவழி மாறுதலில் பணிமாற்றம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பரிசீலிக்கலாம். ந.க.எண். 7367/2010/எம்.சி. 2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 117 நாள் 12.09.2011</u>**

அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் 51

| பொருள் | கோயம்பத்தூா் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வாா்டு எண் 6 – திருக்குமரன் நகரில் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் நமது மாநகராட்சியால் கட்டிமுடிக்கப்பட்ட சிறகு பூப்பந்துக்காள உள்விளையாட்டு அரங்கத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடுவது – சம்பந்தமாக. |
|---|---|

கோயம்புத்தூா் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வாா்டு எண் 6-ல் உள்ள திருக்குமரன் நகரில் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் நமது மாநகராட்சியால் கட்டிமுடிக்கப்பட்ட சிறு பூப்பந்துக்காள உள்விளையாட்டு அரங்கத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் விடப்படுகிறது.

| | |
|---|---|
| 1) | இந்த உள்விளையாட்டு அரங்கினை சிறு பூப்பந்து விளையாட்டினை தவிர வேறு காாியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது |
| 2) | இந்த உள்விளையாட்டு அரங்கினை பயன்படுத்துவது சம்பந்தமாக மாநகராட்சி நிா்வாகம் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் கட்டுப்பட்டதாகும். |
| 3) | இந்த உள்விளையாட்டு அரங்கினை பயன்படுத்துவதற்கு செலுத்தவேண்டிய கட்டணத்தை மாநகராட்சி அவ்வப்போது நிா்ணயிக்கலாம். |
| 4) | இந்த உள்விளையாட்டு அரங்கில் விளையாடுவதற்கு ஒவ்வொரு வீரா்களுக்கும் நேரம் ஒதுக்கித்தர மாநகராட்சியால் அவ்வப்போது அமைக்கும் குழுவிற்கு முழு அதிகாரம் உள்ளது. |
| 5) | இந்த உள்விளையாட்டு அரங்கினை சுற்றியுள்ள தோட்டம், பூங்கா, சிறுவா் விளையாட்டுத் திடல் ஆகியவற்றை மாநகராட்சியால் அவ்வப்போது அமைக்கப்படும் குழுவே பராமாிக்க வேண்டும். |

| | |
|---|---|
| 6) | இந்த உள்விளையாட்டு அரங்கினை பராமரிக்க கீழ்க்கண்ட ஒரு நிர்வாகக் குழுவினை கோயம்புத்தூர் மாநகராட்சி அமைக்கவேண்டும்.<br><br>1) இந்த உள்விளையாட்டு அரங்கம் அமைந்துள்ள மண்டலத்தின் தலைவர் - தலைவர்<br>2) மாநகராட்சி ஆணையாளர் - செயலாளர்<br>3) வார்டு சம்பந்தப்பட்ட இளம் /உதவி பொறியாளர் /சுகாதார ஆய்வாளர் - 2 உறுப்பினர்கள்<br>4) இந்த உள்விளையாட்டு அரங்கம் அமைந்துள்ள இடத்தின நலச்சங்கத்தின் தலைவர் - 1 உறுப்பினர்<br>5) இந்த உள்விளையாட்டு அரங்கத்தில் விளையாடும் வீரர்க பிரதிநிதி ஒருவர் - 1 உறுப்பினர்<br>6) மாநகராட்சி உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவர் - 1 உறுப்பினர்<br>7) வார்டு மாமன்ற உறுப்பினர் - 1 உறுப்பினர் |
| 7) | இந்த உள்விளையாட்டு அரங்கத்திற்கு தனியாக மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் (தலைவர்), உதவி ஆணையாளர் (செயலாளர்) ஆகியோர் பெயரில் கூட்டாக வங்கி கணக்கினை துவங்கி பராமரிக்க வேண்டும். |
| 8) | விளையாட்டு அரங்கில் விளையாடும் வீரர்கள் ஒவ்வொருவரும் நுழைவு கட்டணமாக ரூ. 2500 (ரூபாய் இரண்டாயித்து ஐநூறு மட்டும்) செலுத்த வேண்டும். மேலும் பிரதிமாதம் ஒன்றுக்கு ரூ.300 (ரூபாய் முன்னூறு மட்டும்) கட்டணமாக செலுத்த வேண்டும்.<br>பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நுழைவுக் கட்டணமாக ரூ. 1000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்த வேண்டும். மேலும் பிரதி மாதம் ஒன்றுக்குரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) செலுத்த வேண்டும். |
| 9) | விளையாட்டு அரங்கில் பயன்படுத்துவதற்காக மின் கட்டணத்தை விளையாட்டு வீரர்களிடம் பெறப்படும் கட்டணத்திலிருந்து செலுத்த வேண்டும். |
| 10) | விளையாட்டு அரங்கில் பராமரிப்பிற்கு ஏற்படும் செலவுகளை விளையாட்டு வீரர்களிடம் பெறப்படும் கட்டணத்திலிருந்து உதவி ஆணையாளரின் அனுமதி பெற்று மாநகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் பணி செய்ய வேண்டும். |
| 11) | விளையாட்டு வீரர்களிடம் பெறப்படும் கட்டணத்தின் வரவு செலவுகளை முறையே பராமரித்து வரவேண்டும். வரவு செலவுகளை அவ்வப்போது ஆணையாளரால் நியமிக்கும் அதிகாரிகளின் ஆய்விற்கு உட்பட்டது. |
| 12) | மேலே உள்ள 1 முதல் 11 வரையிலான நிபந்தனைகளில் எந்தவொரு நிபந்தனையும் மீறப்பட்டாலும் குழுவை இரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. |

மேற்கண்ட நிபந்தனைகள் மற்றும் கட்டணத் தொகைகள் நிர்ணயம் செய்ய கல்வி மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் அனுமதி தீமானம் எண் 1 நாள் 19.08.2011-ல் பெறப்பட்டதைத் தொடர்ந்து மன்றத்தான் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 07049/11/ கி2டி 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 118 நாள் 12.09.2011**

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தீர்மானம் எண். 1 நாள் 19.08.2011 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**